Registered No. M-4483

Madras War Review { TAMIL / 19-11-1943

யுத்த சஞ்சிகை

மலர் IV　　1943-ம்௵ நவம்பர் ௴ 19௳, வெள்ளிக்கிழமை　　இதழ் 12

இந்தியர் புகழுக்கு, மேலும் புதுவெற்றிகள்

இத்தாலி குலைந்து விட்டது. நாஜிப் படைகளை இந்தியப் படைகள் ஐரோப்பா வரை விரட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்தியப் படைகள் இப்போது இத்தாலியில் இருக்கின்றன. எதிரியோடு இவர்கள் போராடிக் கொண்டிருந் திருக்கிறார்கள். கஷ்டமான மலைப் பகுதிகளில் பல இடங்களில் சமீபத்தில் அடுத்தடுத்து எதிரிகளோடு போராடி அவர்களை விரட்டி யடித்தார்கள். கடைசியில் அவர்கள் டிரிக்னோ ஆற்றங் கரை யருகில் அணி வகுத்திருப்பதாகத் தகவல் கிடைக்கிறது.

பதினேழு பவுண்டு பீரங்கிகள் முதலிய புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட யுத்தத் தளவாடங்களெல்லாம், இந்தியப் படைகளுக்குக் கொடுக்கப்பட் டிருக்கின்றன. வடாப்பிரிக்காவில் போராட்டம் நடைபெற்ற போது இந்தியப் படைகள் மிகுந்த ஆத்திரத் தோடு தாக்கியும், மன உறுதியோடு நெருக்கடிகளைச் சமாளித்துக் கொண்டும் வந்தன. அதே உணர்ச்சியோடும் ஊக்கத்தோடும் தான் இங்கேயும் இந்தியப் படைகள் போராடுகின்றன. இந்தப் படையினர் மேலும் வெற்றி வாகை சூடி தம் நாட்டிற்கு மேலும் புகழைத் தேடித் தருவார்களென்று நாம் நிச்சயமாக நம்பலாம்.

—மேன்மை தங்கிய சர் க்ளாட் ஆக்கின்லக், இந்திய படைத் தலைவர்,
இந்திய அரசாங்க சபையில் நவம்பர் மாதம் 15-ம் தேதி கூறியது.

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
முகப்புப் படம் : சர் க்ளாட் ஆக்கின்லெக் ..	1	விமான மூலம் வைத்திய உதவி	6
இந்தியர் புகழுக்கு, மேலும் புது வெற்றிகள்.	1	"எங்கள் கடவுளே கோட்டை"	7
முர சொலி	2	20 லட்சம் பவுன்	8
விளம்பரம் : "விடுதலை"	2	அங்கும், இங்கும்	9
தலையங்கம் : வேவல் பிரபுவும் உணவுப் பிரச்சினையும்	3	யுத்த நாட் குறிப்புகள்	11
போர்முனை நிகழ்ச்சி விளக்கம்	5	விளம்பரம் : பரிசுகள்	12

முர சொலி

"பர்மா எல்லைப் புரத்தில், முன் பிருந்தது போலவே தான், நிலைமை ஏறக்குறைய இருந்து வருகிறது. மேற் கரங்கத்தில் நம் வேலையைப் பூரணமாகச் செய்து முடிக்க, தேவையான தளவாடங்கள் வரும் வரை எப்படிக் காத்துக் கொண்டிருந்தோமோ, அது போலவே, இப்போதும் காத்துக் கொண்டிருக்க வேண்டி யிருக்கிறது."

—சர் க்ளாட் ஆக்கின்லெக், *இந்திய பிரதம படைத் தலைவர்,*
இந்திய அரசாங்க சபையில் நவம்பர் 15-ம் தேதி கூறியது.

*　*　*　*　*　*

"நாம் தாக்க வேண்டிய பருவம் வந்து விட்டது. வடக்கே அலேஷியன் தீவுகளிலுள்ள படைகள் தகுந்த பாதுகாப்புக்களோ டிருக்கின்றன. தெற்குப் பசிபிக் கடலிலும் தென் மேற்குப் பசிபிக் கடலிலும் உள்ள நம் எல்லா வகைப் படைகளும் ஜப்பானியர்களை மகா கடுமையாகத் தாக்குவதனல், அவர்களின் நிலைமை மகா மோசமா யிருக்கிறது. மற்ற பகுதிகளில் எதிரிகளுக்கு எதிர்ப்பில்லை. இனி எதிரிகளுக்குக் கொஞ்சமும் நாம் ஓய்வு கொடுக்கப் போவதே கிடையாது. புதிய வெற்றியின் அறிகுறிகள் தோன்றுகின்றன."

—அட்மிரல் செஸ்டர் நிமிட்ஸ், *அமெரிக்கக் கப்பற்படை பிரதம தளபதி,*
நவம்பர் 11-ம் தேதி செய்த வானொலிப் பிரசங்கத்தில் கூறியது.

*　*　*　*　*　*

"முக்கியமான யுத்த அரங்கங்களில், சீன - பர்மா - இந்தியா போர் முனையும் ஒன்றாகும். கூடிய விரைவில், இதுவே மகா முக்கியமானதாகவும் ஆகலாம்."

—ஜெனரல் காவெல், *அமெரிக்க சப்ளை படைத் தலைவர்,*
நியூ டில்லியில் நவம்பர் 16-ம் தேதி கூறியது.

*　*　*　*　*　*

"மூன்று நேச நாட்டு அரசாங்கங்களுக் குள்ளாக வேற்றுமையை உண்டாக்க, ஜெர்மானியர்கள் பெரு முயற்சி செய்தனர். அவர்கள் எண்ண மெல்லாம் அடியோடு நாசமாயின. இப் படிப் பட்ட முறைகளைக் கையாளுவதனல், தம் தலைவிதியைத் தவிர்க்க அவர்களால் முடியா தென் பதை, அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்."

—மிஸ்டர் ஈடன், *காமன்ஸ் சபையில் மாஸ்கோ மகா நாட்டைப் பற்றி*
அறிக்கையிட்டு, நவம்பர் 11-ம் தேதி கூறியது.

தமிழ்ப் பெருமக்களே ! "விடுதலை" உங்களுடைய பத்திரிகையே !!

ஏனென்றால், இது சரியான முறையில் உள்ள பத்திரிகையாகும்.

ராய்ட்டர், அசோசியேட் பிரஸ் தந்திச் செய்திகளை வாசகர்களுக்கு இப் பத்திரிகை அப்படியே தருகிறது.

குறிப்பாகத் தமிழ் நாட்டின் நன்மைக்கு வேண்டிய அகில இந்தியச் செய்திகளை யெல்லாம் வெளியிடுகிறது.

இது எந்த ஒரு குறிப்பிட்ட பகுதியாருடைய கருத்தை மட்டும் வெளியிடும் பத்திரிகை யல்ல.

நமது கீழ்த் திசையில் யுத்த மேகம் பரவிக் கொண்டிருக்கிறது.

இந்தியாவின் நலன்களும் உங்களுடைய தனிப்பட்ட நலன்களும் பாதிக்கப்படலாம்.

எனவே, அன்றாட நிகழ்ச்சிகளை அப்போதைக்கப்போது உங்கள் நன்மையை நாடி அறிவித்துக் கொண்டிருக்கும் தொண்டை, "விடுதலை"ப் பத்திரிகை செய்துவரும்.

"விடுதலை" படியுங்கள்.

வருடச் சந்தா : (தபால் மூலம்) ரூ. 24-0-0. சென்னைக்கு ரூ. 20-0-0.
மாத சந்தா : ,, ரூ. 2-2-0. சென்னைக்கு ரூ. 1-12-0.
தபாற் பெட்டி நெம்பர் 325.

மானேஜர்,
"விடுதலை"
சிந்தாதரிப்பேட்டை, சென்னை.

Registered No. M-4483.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1943-ம் ௵ நவம்பர் ௴ 19௳, வெள்ளிக்கிழமை | இதழ் 12

வேவல் பிரபுவும் உணவுப் பிரச்சினையும்

வேவல் பிரபு.

நவம்பர் மாதம் 8-ம் தேதி இந்தியா சட்ட சபைக் கூட்டம் ஆரம்பமானது. சாதாரணமாக, புதிதாக நியமிக்கப் பட்டுள்ள வைசிராய்கள் தாம் பதவி எற்ற பிறகு, அடுத்து நடக்கும் சட்ட சபைக்கு, நேரில் விஜயம் செய்து, மேல சபையினரையும் கீழ் சபையினரையும் கூட்டுவித்து, ஒரு பிரசங்கம் செய்வது வழக்கம். ஆனால், நமது புதிய வைசிராயான மேன்மை தங்கிய வேவல் பிரபு அவர்களோ, இந்த முறையைப் பின்பற்றவில்லை. நேரில் பிரசங்கம் செய்வதற்குப் பதிலாக, ஒரு செய்தி யனுப்பினார். அதில், தானே நேரில் வழக்கப்படி சபையினருக்கு ஒரு பிரசங்கம் செய்யாததற்கு இரண்டு காரணங்கள் உண்டென்றும், அவற்றுள் ஒன்று உணவுப் பிரச்சினை யென்றும் கூறினார். மேலும், தனக்கு முன்பு பதவி எற்ற வைசிராய்களெல்லாம் எப்ரல் மாதத்தில் பதவி எற்றார்களாகையினால், இந்திய விஷயங்களை உணர்ந்து கொள்ளப் போதுமான அவகாச மிருந்த தென்றும், ஆனால், தான் அக்டோபர் மாதத்தில் பதவி எற்றுக் கொண்டதனால், மூன்று வார அவகாசத்தில் இந்திய விஷயங்களை உணர்ந்து கொண்டு, அவை பற்றிப் பேசத் தனக்கு அவகாசமில்லை யென்றும் குறிப்பிடுகிறார். இரண்டாவதாக, "தற்போதைக்கு உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பது எப்படி என்பதிலேயே என் ஆலோசனைகளும் முயற்சிகளும் பதிந்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட முக்கியமான விஷயத்தைக் குறித்த முழு விவரங்களையும் பற்றி எவ்விதப் பிரசங்கமும் செய்யக் கூடிய நிலைமையில் நான் இல்லை" என்று தெரிவிக்கிறார்.

இவர் வைசிராய் பதவி எற்ற ஒரு வாரத்திற்குள்ளாகவே, வங்காளத்தில் உணவுப் பஞ்சம் மிகவும் கடுமையாக உள்ள பகுதிகளுக்கு விஜயம் செய்தார். ஆகவே, உணவுப் பிரச்சினை பற்றி எவ்வளவு முக்கியமாகக் கருதுகிறாரென்று விளங்குகிறது. இவர் அக்டோபர் மாதம் 20-ம் தேதி வைசிராய் பதவியை எற்று ராஜ விசுவாசப் பிரமாணம் செய்தார். அக்டோபர் மாதம் 26-ம் தேதி இரவு, மாறு வேடத்துடன், தன் மனைவியாரோடும் வங்காள கவர்னரான மேன்மை தங்கிய சர் தாமஸ் ருதர்போர்ட் துரையவர்களுடனும் கல்கத்தாவில் ஜன நெருக்கமான பகுதிகளில், திக்கற்றுக் கிடப்பவர்கள் மிகுந்துள்ள இடங்களை, நேரில் பார்வையிட்டார். இவர்களை யாரும் சந்தேகிக்கவில்லை. சில இடங்களில், மேன்மை தங்கிய வைசிராய் பிரபு, கையில் ஒரு மின்சார விளக்கோடு, திக்கற்றவர்கள் படுத்துக் கிடந்த இடங்களிலே நெடுக நடந்து போய், அங்கிருந்தவர்களின் உண்மை நிலைமையை உணர்ந்து கொண்டார். பண்டைக் காலத்தில், இந்திய மன்னர்கள் மாறுவேடம் பூண்டு நகர் சோதனை செய்வது வழக்கம். இராக் காலத்தில், இருட்டில் தெருக்களில் சென்று, தம் குடிகளின் உண்மை நிலையைத் தாமே நேரில் தெரிந்து, அவர்களுக்குக் குறை பாடுகளிருந்தால், அவற்றைப் போக்க வழி தேடுவது அவர்கள் வழக்கம். இது பற்றிய காதைகள் இன்னும் வழக்கில் இருக்கின்றன.

நமது வைசிராய் பிரபு வங்காளத்திற்கு விஜயம் செய்தவுடனே, கைமேல் பலன் எற்பட்டது. உணவுப் பொருள்கள் போக்கு வரவை மேல் பார்க்கும் பொருட்டு, மேஜர் ஜெனரல் எ. வி. டி. வேக்லி நியமிக்கப்பட்டார். இவர் நெடுங் காலமாக இந்தியாவில் உத்தியோகம் செய்தவர். 1942-ம் வருஷம் நடைபெற்ற பர்மா போரில் ஈடுபட்டிருந்தார். ஆகவே, பர்மா அனுபவமும் அவருக்கு உண்டு. அன்றியும் பீஹாரில் கலவரம் கடுமையாக இருந்தபோது, அங்கேயும் சேவகம் செய்தார். இதனால் 'சப்ளை' பிரச்சினைகளைப் பற்றி அவருக்கு அதிக அனுபவ முண்டு. இப்போது, உணவுப் பொருட்கள் போக்கு வரவுகளைத் தகுந்தபடி பெருக்குவது சம்பந்தமாக, வங்காள அரசாங்கத்திற்கு உதவியாக இருந்து கொண்டிருக்கிறார். மற்றும், எந்தெந்த வகைகளில் வங்காளத்தில் கஷ்டப்படும் திக்கற்ற மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமோ, அந்த வேலையை மேஜர் ஜெனரல் ஆர். ரிச்சர்ட்சன் மேற் கொண்டிருக்கிறார். இவர், கல்கத்தா பகுதியிலுள்ள இராணுவத் தலைவரின் டிப்டி உத்தியோக தலைவர். தகுந்தபடி இராணுவ வைத்திய உதவியும், மற்றப் பொருள்களும், போக்கு வரவு சாதனங்களும், தேவைபட்ட இடங்களிலெல்லாம்,

இராணுவ அதிகாரிகள் கொடுத்து உதவுவதாகவுந் தெரிகிறது. வைசிராய் நேர்முகமாகப் பார்வையிட்டதன் பயனாக, வங்காளத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஜில்லாக்களுக்கு, இராணுவத்தாரிட மிருந்து கிடைக்கக் கூடிய எல்லாப் பொருட்களும், கிடைத்தன. உணவுப் பொருள்கள் போக்கு வரவு வசதிகளும், மற்ற ஸ்டோர் ச்சாமான்களும், தங்குவதற்குத் தற்காலிக விடுதிகளும் வழங்கப்பட்டன. பஞ்ச நிலைமையைச் சமாளிக்கும் பொருட்டு, மேன்மை தங்கிய வேவல் பிரபு அவர்கள் மேற் கொண்ட முறைகளை, இந்தியா முழுவதும், இங்கிலாந்தும் பெரிதும் பாராட்டுகிறது. நவம்பர் மாதம் 4-ம் தேதி காமன்ஸ் சபையில் நடை பெற்ற விவாதத்தின் போது, எதிர்ப்புக் கட்சியைச் சேர்ந்தவர்களும் கூட, வேவல் பிரபு ஊக்கத்தோடு மேற் கொண்டுள்ள முறைகளைப் பெரிதும் பாராட்டி யிருக்கிறார்கள். மிஸ்டர் பித்விக் லாரென்ஸ் கீழ்க்கண்டவாறு பாராட்டிப் பேசினார் :—"இப்போது ஒரு புதிய வைசிராய் இருக்கிறார். அவருக்குக் கற்பனைத் திறமை யிருக்கிறது. தன் செயலைக் கொண்டு, பஞ்சத்தைக் குறித்துத் தான் கொண்டுள்ள மிகுந்த அக்கரையை, அவர் வெளிப்படுத்தி யிருக்கிறார்." மிஸ்டர் ரெஜினல்ட் சோரென்சன் கூறியதாவது :—"தேவைப்பட்டவர்கள், தங்குவதற்கு இட வசதிகள் செய்து கொடுக்க வேவல் பிரபு ஏற்பாடுகள் செய்திருக்கிறார் என்று கேள்விப்பட்டு என் மனம் பூரிக்கிறது. பஞ்சத்திற்கு மக்கள் உள்ளாகாது தடுக்க வேண்டியது எவ்வளவு அவசியமென்று அவர் கட்டாயம் உணருவாரென்று நான் நிச்சயமாக நம்புகிறேன்".

காந்தியாரின் உண்ணுவிரதப் பிரச்சினை காரணமாக, வைசிராய் நிர்வாக சபை யங்கத்தினர் பதவியை ராஜிநாமா செய்த சர். எச். பி. மோடியும், மிஸ்டர் நளின ரஞ்சன் சர்க்காரும் ஒரு கூட்டறிக்கை விடுத்திருக்கிறார்கள். அதில், வேவல் பிரபு, தன் வேலையை நல்ல முறையில் ஆரம்பித்திருப்பதாக ஒப்புக் கொள்ளுகிறார்கள். "தன் ஆட்சி ஆரம்பத்திலேயே, உணவுப் பிரச்சினையை வெல்ல வேண்டுமென்னும் உறுதியோடு செயலாற்றுகிறார். இந்த நிலைமை பற்றி உலகம் முழுவதுமே கவனித்துக் கொண்டிருக்கிறது" என்று கூறுகின்றனர்.

'சப்ளை'களின் முக்கியத்துவம்

இது ஒரு ஆச்சரியப்படத்தக்க விஷயமல்ல. வேவல் பிரபு படைத் தலைவரா யிருந்த போது, என்ன கூறுவது வழக்கமென்றால், "ஒவ்வொரு ஊரைப் பற்றியும் போக்கு வரவு வழிகளைப் பற்றியும் எந்தெந்தப் பொருள் எங்கெங்கே கிடைக்கும் என்பது பற்றியும் தெளிவாக உணர்ந்திருப்பது தான், இராணுவ ஞானத்திற்கு அடிப்படையானவையே யொழிய, பலர் நினைப்பது போல, இராணுவ யுத்த தந்திர முறைகள் அல்ல". பீல்ட் மார்ஷல் வைகௌண்ட் அலன்பியின் புகழ் வாய்ந்த வாழ்க்கைச் சரித்திரத்தின் முன்னுரையை ஆரம்பிக்கு முன்னதாகவே, சாக்ரெடிஸ் கூறியுள்ள மேற்கோள் வசனம் காணப்படுகிறது. அது வருமாறு :—

"ஒரு படைத் தலைவன் தன் படைக்குத் தேவையான ஆட்களையும், அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களையும் மற்ற சாமான்களையும் எங்கிருந்து சேகரிக்க வேண்டு மென்று தெரிந்திருக்கக் கடமைப் பட்டிருக்கிறான். தானாகவே தன் கற்பனைத் திறமையைக் கொண்டு திட்டங்கள் வகுக்கக் கூடியவரா யிருக்க வேண்டும். அந்தத் திட்டத்தை அனுபவ ஞானத்தோடும் ஊக்கத்தோடும் நிறைவேற்றக் கூடியவரா யிருக்க வேண்டும். எல்லா விஷயங்களையும் கூர்ந்து கவனிக்க வேண்டும். சோர்வடையலாகாது; புத்திசாலித் தனமாக நடந்து கொள்ள வேண்டும். அன்பாகவும் கடுமையாகவும், எளிய முறையிலும் தந்திரமாகவும் இருந்து வர வேண்டும். ஒரு காவலாளியாகவும், கொள்ளைக்காரனாகவும், வெகு தாராள மனப்பான்மையோடும் கருமித் தனமாகவும், முரட்டுத்தனமாகவும், நாசுக்காகவும் நடந்து கொள்ள வேண்டும். இயற்கையினும் செயற்கையினாலும் இந்த குணங்களையும் மற்றும் பிற குணங்களையும் அவர் பெற்றிருக்க வேண்டும். அன்றியும், தன் படைகளோடு எந்த முறையில் பழகுவது என்றும் தெரிந்திருக்க வேண்டும். ஏனென்றால் கலகக்காரக் கூட்டம் இடிந்து போன ஒரு வீட்டின் கற்களுக்குச் சமமானது."

வேவல் பிரபுவிடம் தலை சிறந்த படைத் தலைவருக் குரிய பெருங் குணங்களோடு, மக்களை ஆளுவதற்கு இன்றியமையாத கருணையும் உண்மையை உணரும் திறமையும் மிளிர்கின்றன. இந்த நெருக்கடியான காலத்தில், இராணுவ முறைகளிலும் அரசியலிலும் தேர்ந்த ஒருவர் தலைமை ஸ்தானத்தை வகிப்பது; நமது நல்ல காலந் தான்.

நிலைமை சீர்ப்படுகிறது

வங்காளத்திலுள்ள நெருக்கடியான நிலைமை கொஞ்சங் கொஞ்சமாகச் சீர்ப் பட்டுக் கொண்டு வருவது சந்தோஷப் படத் தக்கதே. வங்காள கவர்னரான மேன்மை தங்கிய சர் தாமஸ் ருதர்போர்டு துரையவர்கள் சென்ற அக்டோபர் மாதம் 8-ம் தேதி கல்கத்தா வானொலி நிலையத்திலிருந்து ஒலி பரப்பிய தோர் பிரசங்கத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார் :—

"அடுத்த மூன்று மாத காலத்துக்குள் வெளியே யிருந்து எந்த வகை உணவுப் பொருளாவது $2\frac{1}{2}$ லட்சம் டன் கிடைத்து விடுமானால், கஷ்டமான நிலைமை மாறி விடும்."

அதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன. இன்னும் மூன்று மாதங்களுக்குப் பிறகு அறுவடை ஆரம்பமாகி விடும். அதுவரை நிலைமையைச் சமாளித்துக் கொள்ள உதவி கோரி அவர் ஒரு வேண்டுகோள் விடுத்தார். அதற்கிணங்க 61,000 டன் அரிசியும், 76,000 டன் கோதுமையும் (ஆஸ்திரேலியாவிலிருந்து வந்ததும் சேர்ந்து), 40,000 டன் பார்லியும், 15,000 டன் தினை முதலிய இதர தானிய வகைகளும், 10,000 டன் பருப்பு வகைகளும் அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டு விட்டன. மேலும் 90,000 டன் கோதுமை பஞ்சாபிலிருந்து அனுப்புவதற்கு ஏற்பாடாகி யிருக்கிறது. சுமார் 3 வாரங்களுக்கு முன்பு (அக்டோபர் 28-ம் தேதி) காமன்ஸ் சபையில் இது பற்றி கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்கையில் இந்தியா மந்திரி மிஸ்டர் எமரி "நாள்தோறும் 2,400 டன் விகிதம் உணவுப் பொருள்கள் வங்காளத்தில் இறக்குமதி யாகின்றன" என்று கூறினார். "எல்லாக் குடியேற்ற நாடுகளும், மன்னர்பிரான் அரசாரங்கமும் இந்தியாவிற்கு உணவுப் பொருட்கள் அனுப்ப வேண்டு மென்று பெரிதும் ஆவல் கொண்டிருந்த போதிலுங் கூட, கப்பல்களில் இடங் கிடைப்பது தான் பெருங் கஷ்டமா யிருக்கிறது" என்றும் கூறினார். இரண்டு வாரங்களுக்கு முன்பு (நவம்பர் 4-ம் தேதி) காமன்ஸ் சபையில் பொதுவாக இந்தியாவிலும் குறிப்பாக வங்காளத்திலு முள்ள உணவுப் பஞ்ச நிலைமைபற்றி, மிஸ்டர் எமரி விடுத்த அறிக்கையில் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார் :—

"இந்தப் பிரச்சினை கப்பல்களில் இட வசதியைப் பொருத்ததாகவே யிருக்கிறது. ஆஸ்திரேலியாவிலும் பிற இடங்களிலும் ஏராளமாகக் கோதுமை கிடைக்கிறது. அவற்றை அனுப்புவதற்குத் தான் கப்பல்கள் வேண்டும். இத்தீவிலுள்ள தளவாட உற்பத்திச் சாலைகளுக்கும், பொது மக்களுக்கும், இங்கே திரண்டிருக்கும் பெரும் படைகளுக்கும், மத்தியதரைக் கடல் முதலிய

பகுதிகளில் திரண்டிருக்கும் மற்ற படையினருக்கும் உணவளிக்க வேண்டும். அன்றியும் ரஷ்யாவிற்கும் ஏற்றுமதி செய்ய வேண்டும். இவைமட்டு மன்றி, ஒவ்வொரு முக்கியமான போராட்டத்திற்கும் கப்பல்களில் ஏராளமான தளவாடங்களைச் சேகரித்தனுப்ப வேண்டியிருக்கிறது............இனி இந்த வருஷம் முடிகிற வரை ஏராளமான உணவுப் பொருட்கள் அனுப்புவதற்கு கப்பல்கள் ஏற்பாடாகி விட்டன. முதலில் கிளம்பிப் போன சில கப்பல்கள் போய்ச் சேர்ந்து விட்டன. அடுத்த சில மாதங்கள் வரை இப்படியே உணவுப் பொருட்கள் கப்பல்களில் போய்ச் சேர்ந்து கொண்டிருக்கும். அவசியமாயிருக்கிற வரையில் அனுப்பப்படும். என்றாலும், இது இலேசான வேலையல்ல வென்பதை நான் மீண்டும் கூற வேண்டியவனா யிருக்கிறேன். ஏனென்றால், இதற்குப் பயன்படும் ஒவ்வொரு கப்பலும், யுத்த முயற்சியைப் பாதிக்கக் கூடியதாகும்.''

உணவுப் பஞ்சம் மிகவும் நெருக்கடியான நிலைமை யடைந்தது முதல், வெளி நாடுகளிலிருந்து 5 கப்பல் உணவுப் பொருட்கள் இந்தியத் துறைமுகங்களில் இறக்குமதியாகியிருக்கின்றன. இந்த நெருக்கடியைப் போக்குவதற்கு புதிய வைசிராய் பிரபுவும், மன்னர்பிரான் அரசாங்கமும் இவ்வாறாகத் தம்மால் இயன்றவரை உதவிக் கொண்டு வருகிறார்கள். இந்தியாவின் சரித்திரத்திலேயே இது போன்றதோர் பஞ்சம் ஒருபோதும் ஏற்பட்டதில்லை.

தீபாவளி சமயத்தில் தேசியப் போர் முனையாளர்கள் விறகுக்குச் சீட்டுக் கொடுத்தனர்.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

மின்னல் வாடுடின்

ஜெனரல் வாடுடின் ஒரு செம்படைத் தலைவர். இவரை மாஸ்கோவில், ''மின்னல் வாடுடின்'' என்று கூறிப் புகழுகிறார்கள். இவர் தன் படைகளுடன் மேற்கு நோக்கி போலந்து எல்லையை நாடிப் போய்க் கொண்டிருக்கிறார். இவருக்குட்பட்டு டாங்கிப் படைகளும் குதிரைப் படைகளும் தான் இருக்கின்றன. இவை, மலைகளில் பனிக்கட்டி சரிவதைப் போல, ஜெர்மன் படைகள் மேல் பாய்ந்து நாசஞ் செய்கின்றன. கியெபுக்குத் தென் மேற்கே உக்ரேனில் டினீப்பர் வளைவிற்கும் பையலேயாத் செர்கோபுக்கும் இடையேயுள்ள நாஜிப் படைகள் சிதறிப் போகும் நிலைமையி லிருக்கின்றன. தெற்கேயுள்ள 'பக்' ஆற்றின் கீழ் கரையில் தாம் புகலிடங் கொள்ளலா மென்று ஜெர்மன் படைகள் நினைத்திருக்க வேண்டும். இந்த ஆறுகளைக் கண்டு செம்படைகள் அலட்சியமாகச் சிரிப்பதாக, மாஸ்கோவி லுள்ள ராய்ட்டர் நிருபர் தெரிவிக்கிறார். ஜெர்மன் நியூஸ் ஏஜென்சியின் இராணுவ நிருபர் கர்னர் எர்னெஸ்ட் வான் ஹாமர் தற்போதைய நிலைமை பற்றி கூறும் போது, ஸ்மாலென்ஸ்க்-ஓஷா ரோட் நெடுக, ரஷ்யப் படைகள் பிரமாதமாகப் பீரங்கிப் போர் நடத்திக் கொண்டு போனதாகவும், டினீப்பர் ட்வைன் பகுதியில் நுழைந் தடித்துக் கொண்டு போகவேண்டு மென்று சோவியத் படைத் தலைவர் எண்ணக் கூடு மென்றும் குறிப்பிட்டார். ஜெர்மானியர்கள், தம் டினீப்பர் அரண்களை சோவியத் படைகள் தாண்டி வந்துவிடு மென்று எதிர் பார்க்கவில்லை. சென்ற வருஷம் தெற்கு டோனெட்ஸ் பகுதியைப் பாதுகாத்துக் கொண்டிருந்தது போலவே, இப்போதும் தெற்கு டினீப்பர் பகுதியையும் பாதுகாத்துக் கொள்ளக் கூடு மென்று அவர்கள் நினைத்தார்கள். முன்பு, டினீப்பர் வளைவின் கோடியிலுள்ள முனை, மகா ஆபத்தானது. ரஷ்யப் படைகள் கார்க்கோபுவி லிருந்து தெற்கு நோக்கி வந்தால், அங்குள்ள ஜெர்மன் படைகளின் இடது புரத்திற்கு ஆபத்து உண்டாகலாம். ஆகவே அந்தப் பகுதியைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சித்தார்கள். மேலும், சற்று தூரம் போய் எதிர்ப்புத் தாக்குதலுக்கு ஆயத்தங்கள் செய்தனர்; ரஷ்ய எதிர்ப்புக்களை எளிதில் வென்றனர்; கார்க்கோபைப் பிடித்து டோனெட்ஸ் பகுதியின் நிலைமையை உறுதிப்படுத்திக் கொண்டனர்.

இந்த முறையும் அது போலவே செய்யலாமென்று அவர்கள் நினைத்தார்கள். ஆகவே ஜெர்மன் படைகள் டினீப்பர் ஆற்றின் மேல் கரைக்கு பின் வாங்கின. நொகெப்பஸ்கி, லைனில் தகுந்த பாதுகாப்போடிருந்தன. ஆசையால், இந்த இடத்தில் தம்மை யாரும் தாக்க முடியாது என்னும் மன உறுதியோடு தான், கொப்பல்ஸ் பிரமாதமாக பத்திரிகைகள் வாயிலாகவும் வானொலிப் பிரசங்கங்களினாலும் பெருமை யடித்துக் கொண்டிருந்தார். இதிலிருந்து ஒரு உண்மை தெளிவாகத் தெரிகிறது. பனிகாலம் வரும் வரையிலும், அதற்குப் பிறகுங் கூட, டினீப்பர் நொகொப்பஸ்கி லைனில் தம் நிலைமையை ஊறுதிப்படுத்திக் கொள்ளக் கூடுமென்று ஜெர்மன் பிரதம படைத் தலைவர் உறுதியோடிருந்தாரென்று தெரிகிறது.

மெலிடபோலை ரஷ்யர்கள் கைப்பற்றிய பிறகு, அவர் எண்ணங்கள் சிதறுண்டு போயின. ஜெர்மானியர் நொகொப்பஸ்கியி லமைத்திருந்த அரண்களை, சோவியத் படைகள் துளைத்துக் கொண்டு, கிரிமியாவிற்குப் போகும் பாதை வரைச் சென்று விட்டன. இதன் பயனாக செபொரேஷேயில் ஜெர்மானியரின் நிலைமை விரைவில் மேலும் மோசமாகத் தலைப்பட்டது. கோசாப் படைகள் பெரிகோப் பூசந்தியை நோக்கி விரைந்து போயின. அப்போது கிரிமியாவி லிருந்த ஜெர்மானியர்கள் வெளி நாடுகளோடு சம்பந்தங் கொள்ள முடியாதபடி துண்டிக்கப்பட்டு விட்டனர். ரஷ்யர்கள் தென்புரம் நோக்கிப் போக ஒட்டாதபடி, கிரிவாய் ராக்குக்குச் சுற்றிலும் ஜெர்மானியர்கள் தம் படைகளைத் திரட்டி வைத்திருக்கிறார்கள். ஆகவே, அங்கே, மிகவும் கடுமையான போராட்டம் நடை பெறலாம். ரஷ்யர்கள் முன்னேறிப் போவார்களானால், ஸ்னமெங்காவி லிருந்து நிகோலேப்பஸ்க்குப் போகும் ரயில்வேக்களை வெட்டிவிடக் கூடும். டினீப்பர் முகத்துவாரத்தி லிருக்கும் பெரிய ஜெர்மன் படையையும் வளைந்து கொள்ளக் கூடும். ஜெர்மானியர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள விரும்புவார்களானால், வெகு விரைவாக ரஷ்யப் படைகளின் வலதுபுரத்தில் தாக்க வேண்டும். ஆனால், கியெப் நகரத்தை ரஷ்யர்கள் கைப்பற்றியதி லிருந்து, ஜெர்மானியர் காலந் தாழ்த்தி எதிர்த்தார்கள் என்று தெரிகிறது.

ரஷ்ய போர்த் தந்திரம் : கிரிமியாவைத் தாக்க ஏற்பாடு.

ரஷ்யர்கள் புதியதோர் போர்த் தந்திர முறையைக் கையாளுகிறார்கள். அடுக்கடுக்காகப் பல செயல்கள். இவை ஒன்றோடொன்று தொடர்பு உடையன. இவை எல்லாம் சேர்ந்து ஒரு நோக்கத்தை ஈடேற்ற உதவும். ரஷ்யாவின் தெற்குப் போர் முனையில் இந்த முறையைத் தான் கையாண்டார்கள். வடக்கே நேவலுக்கு மேல் திசையில், ரஷ்யர்கள் புகுந்து தாக்கினார்கள்; மத்திய பகுதியில் கியெபைத் தாக்கினார்கள்; கெர்ச்சுக்கு வடமேற்கிலும் தெற்கிலும் சோவியத் படைகள் போய் இறங்கின. இவ்வளவும் கிரிமியாவின் கிழக்கு வாயிலைக் கடுமையாகத் தாக்கும் பொருட்டுத் தான். நெருக்கடியான நிலைமையில் தாம் இருப்பதாக ஜெர்மானியர்களுக்குத் தெரியும். இப்போது கிரிமியா மற்ற நாடுகளோடு தொடர்பறுந் திருக்கிறது. கிழக்கு நோக்கிப் போகும் ரஷ்யப் படைகள் தெற்கு நோக்கி பெரிகோப் ஜலசந்தி வழியாகப் போனால், ஜெர்மன் படைகள், கொறடாப் பிடிக்கு உள்ளாக நேரும். ஜெர்மன் படைகளின் நிலைமை கேவலமாயிருப்பதாக, ஜெர்மன் யுத்த நிருபரான ஹெய்ன்ஸ் மெகர்லின் நவம்பர் மாதம் 1-ம் தேதி செய்த தோர் வானொலிப் பிரசங்கத்தில் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

அவர் அப்போது கூறியதாவது: “ஒரு ஜெர்மன் படை தன்னை விட மூன்று பங்கு பெரிய தோர் சோவியத் படையை எதிர்த்துத் தாக்கியது. மிகப் பெரிய எதிரிப் படைகளோடு போராட வேண்டிய தாயிற்று. ஒவ்வொரு நாளும் தம்மை விட மகா பலம் பொருந்திய எதிரிகளோடு போராடினுர்கள். அதை அவர்கள் வெறுக்கிறுர்கள்.”

ஆஸ்திரியா பற்றி மாஸ்கோ தீர்மானம்.

ஹிட்லருக்கு முதலில் பலியான ஆஸ்திரியாவை மீட்க வேண்டு மென்பது மாஸ்கோ தீர்மானங்களில் ஒன்று. நேச தேசத் தலைவர்கள் கொடுத்த வாக்குறுதிக்கு இத்தீர்மானம் ஒத்திருக்கிறது. சென்ற 1942-ம்௵ பிப்ரவரி௴ 18௳ பிரிட்டனிலிருந்த ஆஸ்திரியர்களுக்கு மிஸ்டர் சர்ச்சில் ஒரு உறுதிமொழி கொடுத்தார். “ஜெர்மன் கொடுங் கோன்மையினின்று ஆஸ்திரியர்களை மீட்க வேண்டும் என்னும் எண்ணத்தை பிரிட்டிஷ் மக்கள் கைவிட்டு விட மாட்டார்கள்,” என்று கூறினுர். ஆஸ்திரியர்களும் ஜெர்மன் மொழியையே பேசுகிறுர்க ளாகையால், ஜெர்மனியோடே ஆஸ்திரியாவும் சேர்ந்திருப்பது தானே நியாயம் என்ற கேள்வி எழலாம். பழைய சரித்திரத்தைக் கொண்டு பார்த்தால் இது நியாய மாகாது. பண்டைய ஆஸ்திரிய சரித்திரம், பரிசுத்த ரோமசாம்ராஜ்யத்தில் அது கொண்டிருந்த நிலைமை, 18, 19-ம் நூற்றுண்டுகளில் ப்ரஷ்யா நடத்திய போராட்டங்கள், ஆஸ்திரியர்களுக்கும் ஜெர்மன் மக்களுக்கும் பரஸ்பரம் இருந்த தொடர்புகள், 1933-ம் வருஷ முதல் 1938-ம் வருஷம் வரை ஹிட்லர் ஆளுகைக் குட்பட்ட ஜெர்மனியோடு ஆஸ்திரியா நடத்திய போராட்டங்கள் ஆகியவற்றைக் கொண்டு பார்த்தால், ஜெர்மானியர்களுக்கும் ஆஸ்திரியர்களுக்கும் நெடுங் காலமாக உள்ள பகைமை வெளியாகும். பரிசுத்த ரோம சாம்ராஜ்யத்தை ஆஸ்திரியர்களான ஹாப்ஸ்பெர்க் வம்சத்தினர் ஆண்டு வந்தார்கள். அது ஒரு கிருஸ்துவ சாம்ராஜ்யமா யிருந்ததே யொழிய, ஜெர்மன் சாம்ராஜ்யமா யில்லை. ஆஸ்திரியாவுக்கும் ப்ரஷ்யாவுக்கும் நெடுங் காலமாகக் கடும் பகைமை யிருந்து வந்தது. என்றுலும், கொஞ்ச காலம், அதாவது 1815-ம் வருஷ முதல் 1866-ம் வருஷம் வரை பலஹீனமான தோர் ஐக்கிய அரசாங்கம் ஜெர்மனியில் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தபோது, ஆஸ்திரியா ஜெர்மன் ஆளுகைக்கு உள்ளானது. ப்ரஷ்யாவின் தலைமையில் புதிய தோர் ஜெர்மன் ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டு மென்று பிஸ்மார்க் விரும்பினுர். 1866-ம் வருஷம் ஆஸ்திரியாவை ஜெர்மனி சடோவா வென்னு மிடத்தில் தோற்கடித்தது. சென்ற மகா யுத்த காலத்தில் ஆஸ்திரியப் படைகள் ஜெர்மனியோடு சேர்ந்து கொண்டு போராடின. அப்போதே ஆஸ்திரிய அந்நிய நாட்டு மந்திரியின் போக்கை அநேக ஆஸ்திரியர்கள் கடுமையாகக் கண்டித்தார்கள். ஆஸ்திரிய ஹங்கேரிய சாம்ராஜ்யத்திற்கே அழிவு ஏற்பட்டு விடுமென்று எச்சரித்தார்கள். அவர்கள் கூறிய மொழிகள் உண்மையாயின. இது தான் ஆஸ்திரிய அரசியல் பிரச்சினை.

ஆஸ்திரியர்-ஜெர்மனி கலை வேற்றுமை.

கி.பி. 1 முதல் 4 நூற்றுண்டுகள் முடியும் வரை, ஆஸ்திரியா, இங்கிலாந்தையும், பிரான்சையும் போலவே, ரோம சாம்ராஜ்யத்தைச் சார்ந்திருந்தது. ஆகவே, அந்நாட்டுக் கலைகள் அவர்களிடம் படிந்தன. அப்போது ஜெர்மானியர்கள் அக் கலாஞானமே இல்லாதிருந்தார்கள். பிறகு ஆஸ்திரியர்களோடு ஜெர்மானியர்கள் கலந்து பழகியதனுல், ஜெர்மானியர்கள் வழக்க பழக்கங்களும் ஓரளவிற்கு ஆஸ்திரியர்களுக்குப் படிந்தன. இன்னும் ஜெர்மன் கலைகளுக்கும் ரோம சாம்ராஜ்யக் கலைகளுக்கும் உள்ள வேற்றுமைகளை ஆஸ்திரியர்களிடம் காணலாம்.

சரித்திர காலந் தொட்டு, ஜெர்மனிக்கும் ஆஸ்திரியாவுக்கும் உள்ள வேற்றுமைகளையும் கலா வேற்றுமைகளையும் கவனித்தால், ஹிட்லர் ஆட்சியோடு என் ஆஸ்திரியா முரண்படுகின்ற தென்று விளங்கும். ஜெர்மனியில் “சோஷியல் டெமொக்ராடிக்” கட்சியையும் தொழிலாளர் சங்கங்களையும் அழித்தது பற்றி, ஆஸ்திரிய ஜனநாயகவாதிகள் பெரிதும் அருவருப் படைந்தார்கள். 1943-ம் வருஷம் ஜெர்மனியிலுள்ள கத்தோலிக்கர்களுக்கு ஹிட்லர் கொடுத்த வாக்குறுதியில், ஆஸ்திரியக் கத்தோலிக்கர்களுக்கு நம்பிக்கையில்லை. யூதர்களைப் படுகொலை செய்ததைக் கண்டு, ஆஸ்திரியர்கள் திகிலடைந்து போனுர்கள். ஹிட்லரின் சர்வாதிகார ஆட்சியை ஆஸ்திரியர்கள் பெரிதும் வெறுத்தார்கள். 1934-ம் வருஷம் ஹிட்லர் ஆஸ்திரியாவுக்குள் புக முயற்சித்தபோது, அவருக்குக் கிடைத்த எதிர்ப்பு, ஆஸ்திரிய மக்களின் உணர்ச்சியை வெளிப்படுத்துகிறது. இரண்டு வருஷங்களுக்குப் பிறகு ஹிட்லர் ஆஸ்திரியாவோடு ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன்படி ஆஸ்திரியாவின் பூரண சுய ஆட்சி உரிமையை அவர் அங்கீகரித்தார். அந்த ஒப்பந்தப்படி ஆஸ்திரியாவில் தேசீய சோஷியலிசம் அனுமதிக்கப் பட்டிருந்தது. அது ஒரு ஆஸ்திரியப் பிரச்சினையாகவே கருதப்படு மென்றும், அதில் ஜெர்மன் அரசாங்கம் தலையிடுவதில்லை யென்றும் ஒப்புக் கொண்டது. ஆனுல், இந்த ஒப்பந்தப்படி, ஹிட்லர் நடக்கவே இல்லை. நாஜிகளின் ஆரம்பத் துரோகங்களில் இதுவும் ஒன்ருகும். இதுபோலவே ஐரோப்பாவி லுள்ள பல சிறு நாடுகளுக்கும் இதுபோலவே அடுத்தடுத்து துரோகம் செய்தனர்.

சேம்பர்லெய்ன் சோதிடம்.

1938-ம் வருஷம் ஆஸ்திரியா ஜெர்மனியோடு சேர்ந்திருப்பதா? கூடாதா? என்பது பற்றி பொது ஜனங்களின் கருத்தை யறிய வேண்டி ‘ஓட்’ எடுக்க வேண்டுமென்று ஏற்பாடுகள் செய்யப்பட்டபோது, அதை அனுமதிக்க ஹிட்லர் மறுத்துவிட்டார். இதிலிருந்தே, ஹிட்லர் ஜெர்மனியோடு சேர்ந்திருக்க ஆஸ்திரியர்களில் பெரும்பாலோர் விரும்பவில்லை யென்று தெளிவாகத் தெரிகிறது. ஆஸ்திரியா தனக்கு விரோதமாகத் தான் ‘ஓட்’ கொடுக்கு மென்று தெரிந்தே அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே படைகளைக் கொண்டு வந்து வைத்துக் கொண்டு, ஆஸ்திரியாவை ஜெர்மனியோடு சேர்த்துக் கொண்டார். ஒரு மாதத்திற்குப் பிறகு, அதாவது ஏப்ரல் மாதம் 10-ம் தேதி, தான் ஆஸ்திரியாவை ஜெர்மனியோடு சேர்த்துக் கொண்டதை ஆமோதிப்பது பற்றி ஜெர்மனி ராஜ்யம் முழுவதிலும் சேர்த்து, ஹிட்லர் ‘ஓட்’ எடுத்தார். 100-க்கு 90 பேர்கள் இதை ஆதரித்தார்கள். ஆஸ்திரியா சம்பந்தப்பட்ட வரை ஹிட்லரின் கையாட்கள் என்ன கொடுமைகள் செய்வார்களோ என்ற பயமும் பீதியும் கொண்டிருந்தனர். ஆகவே, ஹிட்லருக்கு ஆதரவாகவே ‘ஓட்’ கொடுக்க வேண்டிய நிர்ப்பந்த நிலைமையி லிருந்தனர். இந்த ‘ஓட்’ எடுக்கப்படு முன்னதாகவே, யூதர்களுக் கிருந்த ஓட்டுரிமை பறிமுதல் செய்யப்பட்டு விட்டது. ஜெர்மன் படைகளும் போலீசும் இருந்ததனுல், சோஷியலிஸ்ட்களும், கம்யூனிஸ்ட்களும், கத்தோலிக்கர்களும் ‘ஆமாஞ் சாமி’ போடவேண்டிய நிர்ப்பந்த நிலைமையி லிருந்தனர்.

இதனுலும், இதுபோன்ற மற்ற முறைகளாலுந் தான் ஆஸ்திரியா ஹிட்லருக்கு முதல் பலியானது. அதன் சுயேச்சையையும் இழந்தது. ஆஸ்திரியா ஐரோப்பாவின் மத்திய கேந்திர ஸ்தானமாகையால் தான், முதலில் ஹிட்லர் அதன்மீது பாய்ந்தார். இதைக் குறித்து 1936-ம் வருஷத்திலேயே தூரதிருஷ்டியுடன் கீழ்க் கண்டவாறு சர் ஆஸ்டின் சேம்பர்லெய்ன் கூறியிருக்கிறுர்:—

“ஆஸ்திரியா அழிந்தால், செக்கோஸ்லேவேகியா பாதுகாப்பில்லாமற் போய்விடும். புதியதோர் பெரும் ஆட்சிக்கு பால்கன் நாடுகளெல்லாம் உள்ளாக நேரும். மத்திய ஐரோப்பா முழுவதையும் பெர்லின் ஆள வேண்டும் என்னும் ஜெர்மானியர்களின் கோரிக்கை ஈடேறி, அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலிருந்து மத்தியதரைக் கடல் வரையிலும், கருங்கடல் வரையிலும் . . . . அக்கோரிக்கை உண்மையிலேயே நிறைவேறியது! மீண்டும் இப்படிப்பட்ட சம்பவம் ஜெர்மன் சரித்திரத்திலேயே நடைபெற ஒட்டாதபடி தடுப்பதற்கான கொள்கைகளை வகுக்கும் நோக்கத்தோடு தான், மாஸ்கோ மகாநாடு கூடியது. ஆஸ்திரியாவில் ஒரு சுயேச்சையுள்ள பலமான அரசாங்கத்தை ஏற்படுத்திவிட்டால், மத்திய ஐரோப்பாவில் அது ஒரு இடை யரணுக உதவும், இனி புதிதாக ஜெர்மனி தலைதூக்கிக் கொடுமைகள் செய்ய முடியாத படி நேசநாடுகளால் தடுக்க முடியும்.”

விமான மூலம் வைத்திய உதவி.

இது வரை இராணுவ வைத்தியப் பகுதியினர் தரையிலும் கப்பல்களிலும் தான் வேலை செய்து கொண்டு வந்தனர். இப்போது அவர்கள் ஆகாய விமானங்களிலும் போய் சிகிச்சை செய்து கொண்டு வருகிறுர்கள். மோட்டார் கார்கள் முதலிய போக்கு வரவு சாதனங்கள் போக முடியாத பாகங்களுக்கு, இவர்கள் விமானங்களில் பறந்து போய் ‘பாரச்சூட்’டுகள் மூலம் தம் கருவிகளுடன் இறங்கி, உடனுக்குடன் சிகிச்சை செய்து, பலருடைய உயிர்களைக் காப்பாற்றுகிறுர்கள்.

அன்றியும் எக்ஸ்-ரே பட மெடுக்கும் இயந்திரத்தையும் தம்முடனேயே எடுத்துப் போகிறுர்கள். இந்த இயந்திரத்தின் உதவியால், காயம் பட்ட பாகங்களைப் படமெடுத்து, அவ்வப்போது சத்திர சிகிச்சை செய்து, உடலிலுள்ள குண்டுகளையோ, கதிர்களையோ அப்புறப்படுத்துவார்கள். இந்த எக்ஸ்-ரே இயந்திரங்களை இரண்டு சிறு பெட்டிகளை இலகுவில் அடக்கம் செய்து விடத் தக்கபடி அமைத்திருக்கிறுர்கள். அடக்கம் செய்யப்பட்ட பிறகு, அதன் கனம் $\frac{1}{2}$ அந்தர் கூட இருக்காது.

"எங்கள் கடவுளே கோட்டை"

ஐரோப்பிய அரணின் வர்ணனை

விசித்திரக் கோட்டை ஓர் சிறைச் சாலை

திருச்சி அகில இந்திய வானொலி நிலையத்தி லிருந்து கோயமுத்தூர் ஜில்லா தேசியப் போர் முனை அமைப்பாளர் ஆர். டி. நாயுடு அவர்கள் சமீபத்தில் ஒலிபரப்பிய பிரசங்கமாவது :—

"எல்லா உலகும் இன்புற்றிருப்பதுவே யல்லாது வேறொன்றறியேன் பராபரமே" என்னும் திருவாக்கு, இப்போது முற்றும் முரண்பட்டு, தானே வாழ வேண்டும்; உலகமே தன் காலடியில் கிடக்க வேண்டும் என்ற கொள்கை கொண்டவர், ஹிட்லர். உலகினையே பெரிய தீயில் ஆழ்த்தியுள்ளார். இதை நிறைவேற்றிக் கொள்ள பல முயற்சிகள் செய்து வருகின்றார். இந்த முயற்சியில் ஒரு வகைப்பட்டது தான் பொய் வதந்திகளைப் பரவச் செய்வது. இவ்வகையில் ஹிட்லர் கைதேர்ந்தவர்.

தான் தாக்கக் கூடிய நிலைமை மாறி, இப்போது தற்காத்துக் கொள்ள வேண்டிய நிலைமை யேற்பட்டு விட்ட தென்று தெரிந்த வுடனே, ஹிட்லர் தன் அட்லாண்டிக் மதிலைப் பற்றி வீண் டம்ப பிரசாரத்தை வீச ஆரம்பித்தார். ஈ, எறும்பு கூட உட்புக முடியாத ஒரு பெருங் கோட்டையாக ஐரோப்பாவை தான் ஆக்கி வைத்திருப்பதாக வீண் பெருமை பேசினார். ஆனால் அந்தோ பாவம்! அந்தக் கோட்டைக்கு கூறை வேய மறந்து விட்டார். அதன் பல பகுதிகள் ஊடுருவி செல்லத் தக்கனவா யிருக்கின்றன என்பதை அறியார் போலும். கேவலமாகப் பல ஊழல்களைக் காப்பாற்றி வரும் அட்லாண்டிக் மதில் அது என்பதை மறந்தார் போலும்.

ஆனால், இத்தகைய விசித்திரக் கோட்டையின் உண்மை அமைப்பையும் நிலைமையையும் என்னவென்று பார்க்கில், முற்றும் முன்னுக்குப் பின் முரணாகவே தோன்றும்.

அதிசயக் கோட்டை

ஐரோப்பாவின் வடக்கு மேற்குக் கரை ஓரமாக சைனா தேசத்தின் பெரிய மதிலைக் காட்டிலும் சுமார் 125 மைல் சுற்றளவு அதிகப்பட்டதும் அதைக் காட்டிலும் அதிக ஆழ முள்ளதும் முற்றிலும் அன்னிய நாட்டு ஆட்களின் வேலையினால் அமைக்கப்பட்டதுமான, ஒரு விசித்திரக் கோட்டையை அமைத்திருக்கிறார். இதன் அமைப்பு மிகவும் அதிசயமாகவே யிருக்கிறது.

டச்சு நாட்டுக் கரை யோரங்களில் அமைந்திருந்த சிங்கார விடுதிகளும் குளிக்கும் மண்டபங்களும் இப்போது குன்றிப் போய், அவற்றிற்குப் பதிலாக பின்னல் முட் கம்பி வேலிகளும், 20 கெஜத்திற்கு மேல் அகலமுள்ள டாங்கிகளைத் தடுக்க ஆழமான ஜலம் நிறைந்த அகழிகளும் உள்ளன. இவைகளுக்குப் பின்னால், அநேக விதமான விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளும் இன்னும் பற்பல விதமான எதிர்ப்புத் தளவாடங்களும் ரகசியமான கோட்டைக் கொத்தளங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இருட்டு அறைகளும் சித்திரவதை யறைகளும்

பழைய காலத்துக் கோட்டைகள் போலவே, இந்த ஐரோப்பிய அரணும் அமைக்கப் பட்டுள்ளது. இந்தக் கோட்டையின் வெளியே, அட்லாண்டிக் சமுத்திரமே ஓர் அரணாய் விளங்குகிறது. இந்த மதில் சுவருக்குள் மூன்று பகுதிகள் உண்டு. மதிலுக்குப் பின் புறமாக உள்ள பாதுகாப்பு, பிரான்ஸின் மேற்குப் பாகத்தில் உள்ளது. அதற்குப் பின் உள் பாதுகாப்புக்கள் பல உண்டு. நடுவில் இருட்டு அறைகளும் சித்திரவதை அறைகளும் மற்ற ஏற்பாடுகளும் உண்டு.

ஏற்கெனவே தாங்கள் செய்த அக்கிரமங்களின் காரணமாக உலகத்தில் ஏற்பட்டுள்ள வெறுப்பையும் பெரும்பான்மையோருடைய யுத்த எதிர்ப்பையும் கண்டு நடுங்கி யிருக்கும் நம் நாட்டு மக்களுக்கு, புகைப் படங்களும், டாம்பீகப் பேச்சுக்களும், மன உறுதியை உண்டு பண்ண, செய்த சூழ்ச்சியே யன்றி வேறு ஒன்றும் இல்லை.

கோட்டை மனப் பான்மையில் விருப்பம் அதிகம்

தங்களைச் சுற்றி துளைக்க முடியாத கோட்டைகளைப் பற்றிக் கேட்கும்போது ஜெர்மன் மக்களுடைய மனம் ஆறுதல் அடையும். ஏனெனில் அவர்களுக்கு இயற்கையில் கோட்டை மனப் பான்மையில் விருப்பம் அதிகம். "எங்கள் கடவுளே கோட்டை" என்ற நம்பிக்கை யுள்ளவர்கள். எப்போதும் கோட்டைகளால் சூழப்பட்டிருப்பதே அவர்களுக்கு மன அமைதியைத் தரக் கூடியதா யிருக்கிறது. ஆனால் மற்றவர்களுக்கு அது பெரும் கஷ்டமாக இருக்கும். சமாதான காலங்களிலும் கூட, எதிரிகள் தங்களைச் சுற்றிலும் முற்றுகை போட்டிருப்பதாக பீதி அடைந்து வருந்துவது சகஜம். ஜெர்மானியரோ தத்துவ சாஸ்திரிகள். இந்த பீதியைத் தான் முற்றுகை மனப்பான்மை என்று கூறுவது. இந்த மனப்பான்மையை அனுசரித்து ஹிட்லர் தன் யுத்தப் பிரசாரத்தை நடத்தி வந்திருக்கிறார். புலி வருகிறது, புலி வருகிறது என்று பல வருஷங்களாக கூக்குரல் இட்டு, தமது நாட்டினரை தயார் செய்து வந்திருக்கிறார். அந்த முற்றுகைப் புலி, இப்போது எல்லா திக்குகளி லிருந்தும் நிஜமாகவே வந்து விட்டது. இனி அவர்களுடைய கோட்டைகளால் யாதொரு பயனுமில்லை. ஒருவித நிபந்தனையும் இல்லாமல் சரணாகதி அடைவதைத் தவிற வேறு வழியில்லை. ஆயினும் கொஞ்ச காலம் தங்களுடைய கோட்டைகளை நம்பிக் கொண்டிருப்பார்கள். அந்த நம்பிக்கையின் பேரில் தங்களுடைய எதிரிகள் இந்தக் கோட்டைகளைக் கண்டு பயந்து போய் விடுவார்கள். தங்களைப் போலவே தங்கள் வசப்பட்ட மற்ற ஐரோப்பிய நாட்டினரும் கோட்டைகளை நம்பி யிருப்பார்கள் என்று எண்ணி சற்று கவலை யற்றுத் தூங்கலாம்.

இவற்றை யெல்லாம் கருதும் போது, நேச நாட்டாருக்கு ஐரோப்பாக் கண்டத்தை எதிர்பார்ப்பது எவ்விதம் என்று மதி மயங்கும் நிலைமையேற்படலாம். இக்கோட்டை கொத்தளங்கள் முழுவதிலும் முக்கியமான இடங்களிலும் சர்வ ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வரும் பக்ஷத்தில், அவ்விடம் சரியானபடி யுத்தம் செய்ய முடியாது. ஆனால், இத்தகைய டாம்பீகமான பேச்சுக்களால், நேச நாட்டாரை ஏமாற்ற முடியும் என்று ஜெர்மானியர்களும் கூட எதிர்பார்க்க முடியாது. நேச நாட்டுத் தளகர்த்தர்கள் ஜெர்மன் ரேடியோவின் பெருமைப் பேச்சுகளை நம்பி, தங்களுடைய யுத்த ஏற்பாடுகளை தீர்மானிக்கப் போவதில்லை.

கோட்டைக்குக் கூறை வேய மறந்து விட்டார்

இந்தக் கோட்டைக்குக் கூறை வேய மறந்து விட்டார். அந்தக் கோட்டையின் பல பகுதிகள் ஊடுருவிச் செல்லத் தக்கனவா யிருக்கின்றன. பிரிட்டிஷ், அமெரிக்க விமானப் படைகள் மேலும் மேலும் கடுமையாகத் தாக்கிக் கொண்டிருக்கின்றன. ஜெர்மனியின் தெற்குப் பகுதியில், முக்கியமாக மாரெத் நகர்ப்பக்கம் ரோம் நதி வழியாகவும் கிழக்குப் பகுதியில் ரஷ்யா மூலமாகவும் விமானங்களி லிருந்து தாக்கத் தக்க நிலைமையிலிருக்கின்றன. தவிர வடக்கு நார்வே வழியாகவும் நதிகள் பள்ளத் தாக்குகள் மூலம் சுலபமாகத் தாக்கலாம். இத்தாலியின் நிலைமையைக் கருதும் போது, ஆல்ப்ஸ் மலையிலுள்ள ப்ரன்னர் கணவாய் வழியிலிருந்து இத்தாலி நாடு ஒரு பெரிய உடைந்து போன அகழின் பாலமாக ஆப்பிரிக்கா வரையில் ஆடிக் கொண்டு நின்றது. அந்தப் பாலம் எப்போது தாக்கப்பட்டு ப்ரன்னர் கணவாய் தனக்கு மூடப்படுமோ என்று திகில் கொண்டிருந்த முசோலினியின் பயம், இன்று உண்மையாயிற்று. முரட்டு முசோலினியே பாலத்தினின்று நழுவி தலைகீழாய் மத்திய தரைக் கடலில் மூழ்கி, மறைவாய் தன் அருமைத் தோழர் ஹிட்லரிடம் சரண் புகுந்து விட்டார். இருபத்தோரு வருடம் அட்டகாசம் செய்து விட்டு, ஆடிப் பாடி அமர்ந்து போனார் முசோலினி. "துள்ளின மாடு பொதி சுமக்கும்." ஹிட்லரைத் தாக்கி ஒழிக்க, உலகமே சேர்ந்து வருகிறது. எத்தனை காலம் இவர் தாக்குப் பிடித்தாலும் முசோலினியைப் போலவே அவரும் தம் நாட்டு மக்களின் சாபத்திற்கு ஆளாகித் தீரவேண்டும். முசோலினியின் வீழ்ச்சி, ஒரு அரக்கனின் வீழ்ச்சிக்குச் சமானமாகும். சர்வாதிகாரிகளுக்கு ஒரு நல்ல படிப்பினை.

ஆண் பெண்களை இடம் விட்டு இடம் ஓட்டுகிறார்கள்!

இத்தகைய சித்திரக் கோட்டை ஆயிரக்கணக்கான சுதந்திர மக்கள் அடிமை வாழ்வில் அடிமைப் படும் சிறைச் சாலையாக விளங்குகிறது. ஐரோப்பாவைச் சுற்றிலும் கட்டியுள்ள கோட்டைகளுக்கு ஏற்ப, அதற்குள் வாழும் ஜெர்மன் தலைவர்களுக்கும் பழங் காலத்துக் கோட்டைகளில் வாழ்ந்து வந்த பிரபுக்களுடைய மனப்பான்மையே யிருந்து வருகிறது. பெர்லின் நகரத்துத் தலைவர்கள், பொது ஜனங்களை அடிமைப் படுத்தி அவர்களை கொள்ளை யடித்து வாழ்ந்து வருகிறார்கள். உணவு, உணவு என்று கதறும் ஏழைகளுக்கு, கோட்டைகளைக் காட்டி சமாதானம் செய்து வருகிறார்கள். ஆண் பெண்களை ஆடுமாடுகளைப்போல் இடம் விட்டு இடம் ஓட்டுகிறார்கள். உணவுப் பொருள்களை ஒன்று சேர்த்து அவரவருடைய வேலைக்குத் தகுந்தவாறு கொடுக்கிறார்கள். முதல் முதல் சிப்பாய்களுக்கு உணவு கொடுக்கப்படும். பிறகு மீதியுள்ளதை, தொழிற்சாலை வேலையாட்களுக்குப் பங்கிடப்படும். தாங்கள் கைப்பற்றின வெளி நாட்டு வேலைக்காரர்கள், அடுத்தபடி கவனிக்கப் படுவார்கள். இதற்குப் பின் ஜெர்மன் தேசக்காரர்களுக்கு தங்கள் தங்கள் ஊரில் உழைத்து வரும் ஆட்களுக்கு ஓர் சிறிது கிட்டும். மற்றவர்களுக்கு ஏகாதசி விரதம். எல்லாம் ஜெர்மனியின் நன்மையை உத்தேசித்தே செய்யப்படுகின்றன. பிரான்சில் விளையும் கோதுமைகள் ஜெர்மன் நாட்டு மக்களுக்கே. ஹாலண்டில் உள்ள வெண்ணை பூராவும் ஜெர்மனியருக்கே. ஸெக்கோஸ்லோவேகியாவின் தொழிற்சாலை பூராவும் ஜெர்மனியருக்கே வேலை செய்ய வேண்டும். ஐரோப்பா இருப்புப் பாதைகள் யாவும் ஜெர்மனியரின் உபயோகத்திற்கே. மற்றவர்கள் நடந்து தான் போக வேண்டும். பெர்லின் நகரத்திலுள்ள நிதிகள் யாவும், ஜெர்மனி மக்களுடைய க்ஷேமத்தைக் கருதியே நடக்க வேண்டும்.

உலகத்தை யாளப் பிறந்தவர்களாம்!

இந்த ஐரோப்பியக் கோட்டையின் வெளி வட்டத்தில் உள்ள ஆட்கள், ஜெர்மன் கட்டுகளை மீறி நடக்கத் தயாராயிருக்கிறார்கள். கோட்டை நடுவிலே, அறுபது லக்ஷம் அயல் நாட்டுத் தொழிலாளிகள், ஒரு பெரிய போலிக் குதிரைக்குள் மறைந்து, பொழுது விடிந்த உடனே வெளிக்கிளம்பும் வீரர்களைப்போல, எப்போது விடியுமோ என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய கோட்டையை பரிபாலிக்கும் தலைவர்கள் பக்கம் சேரக்கூடியவர்கள், மிகவும் கொஞ்சம் பேர்கள் தான். வாஸ்தவத்தில் அந்தத் தலைவர்களைத் தவிர, வேறு யாரும் ஆதரவு அளிக்க மாட்டார்கள். உலகத்தை ஆளப் பிறந்தவர்கள் தாங்கள் தான் என்ற மனப் பான்மை என்னவாயிற்று. கொள்ளை யடித்த நாடுகளைக் காப்பாற்றினால் போதும் என்ற பயம் ஒன்று தான் காணப்படுகிறது.

இந்தக் கோட்டையின் வெளி அரண்கள், பல்லாயிரக் கணக்கான மைல்கள் நீளமுள்ளன. இந்தக் கோட்டைக்கு உள்ளே இருக்கும் மக்கள், ஹிட்லர் மீது, கொடூரமான விரோத மனப்பான்மை கொண்டவர்கள். அவர்கள் தாக்குவதற்கு எந்தச் சமயம் எந்த இடம் தகுதியானதோ, அப்போ தெல்லாம் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். "இந்த விடுதலைப் பட்டாளங்கள் ஐரோப்பாவைத் தொடக் கூடாது. இந்தக் கோட்டை என்னுடையது அதை நானே தான் வைத்திருக்கப் போகிறேன்" என்று வீண் டம்பம் பேசுகிறார் ஹிட்லர்.

"நேச நாட்டினர் நாளுக்கு நாள் அதிக பலம் பெற்று வருகிறார்கள். நான் இந்தக் கோட்டையை பாதுகாக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறேன்." என்று ஹிட்லர் கதறுகிறார். வெளியில் எங்கும் தோல்விமயம். அமெரிக்க பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானங்கள் இரவு தோறும் வந்து கோட்டைக்குள் குண்டு மாரிபெய்து விட்டுப் போகின்றன. உள்நாட்டில் ஜெர்மன் மக்களுக்குள் அதிருப்தியும் தைரியக் குறைவும் உண்டாகியிருக்கின்றன. மேலும் போராடுவதா அல்லது சரண் புகுவதா என்னும் திரிசங்கு சுவர்க்க நிலைமையில் இருக்கின்றார்கள் ஜெர்மன் பொது மக்கள். ஜெர்மனி முழுதையும், அதன் கையாட்களாக உள்ள மற்ற எல்லா நாடுகளையும் இதுபோலவே தொடர்ந்து தாக்க ஆரம்பம். ருமேனியா, ஹங்கேரி, பின்லண்டு, பல்கேரியா முதலிய ஜெர்மனிக்குத் துணைபோயிருக்கும் நாடுகளில் உள்ள மக்களிடையே, பெருங்கிளர்ச்சி இருந்து வருகிறது. சமாதானத்தை அவர்கள் விரும்புகிறார்கள். நாஜிகளின்

(8-ம் பக்கம் பார்க்க.)



பெங்களூரில் தாய்மார்கள், தம் மக்கள், படைப் பயிற்சி சாலையில் கவாத்து செய்வதைக் கண்டு களிக்கின்றனர்.

20 லட்சம் பவுன்

(சர் ராபர்ட் டெனிஸ்டன் எழுதிய கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது.)

"இருண்ட மாகாணம்" என்று யார் சொன்னது சென்னை மாகாணத்தை? அப்படிச் சொன்னவன் கெட்டிக்காரனல்ல வென்று தான் நான் நினைக்கிறேன். அவனது அறிவுப் புலன் விசாலமா யில்லை. "இருண்ட" என்னும் பதத்திற்கு என் அகராதியில், சிக்கிக் கொண்ட, ஒழுக்கக் குறைவான, அறிவில்லாத என்ற பொருள்கள் தான் காணப்படுகின்றன. இம் மாகாணத்திற்கு இப்படிப்பட்ட பட்டஞ் சூட்டிய கனவானின் திரித்துக் கூறும் திறமையைக் குறித்து நான் எதுவும் வியாக்கியானம் செய்ய வேண்டியதில்லை. ஆனால், அவரைக் குறித்து என் கருத்தைக் கேட்டால், அவரை ஒரு 'அடி முட்டாள்' என்று தான் சொல்லுவேன்.

தன் போன்ற மக்களிடம் அன்பு செலுத்தி உயர்வடைந்த "அபு பென் ஆடெம்" என்னும் (ஆங்கிலச்) செய்யுளை உங்கள் பள்ளிக்கூடங்களில் நீங்கள் படித்திருக்கிறீர்களா? மற்றவர்களைக் குறித்துச் சிந்தித்துப் பார்ப்பதற்கு யுத்த காலமும் மிகவும் ஏற்றதே. இந்த "ஒழுக்கக் குறைவான, அறியாமையில் மூழ்கியுள்ள" மாகாண மக்கள், இந்த உண்மையை எந்த அளவிற்கு உணர்ந்திருக்கிறார்களென்று, அவர்கள் சென்னை கவர்னர் யுத்த நிதிக்கு 20 லட்சம் பவுன் கொடுத்து உதவியிருப்பதிலிருந்து, தெளிவாக விளங்குகிறது. மற்ற மாகாணங்களெல்லாம் சாவதானமாக வசூலித்துக் கொண்டிருந்தனவே யொழிய, சென்னை மாகாணத்தோடு போட்டி போட்டன வென்று சொல்லவே முடியாது. ஆகவே நம் வேலை பற்றி நாம் திருப்தி யடைவோம். அளவு கடந்தும் திருப்தி யடைந்து விடக் கூடாது; ஏனென்றால், நாம் சேர்த்துக் கொடுத்த தொகை 3 மணி நேரப் போராட்டத்திற்குத் தான் ஈடு கொடுக்கும். என்றாலும், அந்த மூன்று மணி நேரப் போராட்டத்தில் எத்தனையோ சம்பவங்கள் நிகழ்ந்துவிடக் கூடும். ஆனால், ஜெர்மன் ரேடியோ கூறிய மொழிகளைக் கேட்டு சர்வ சாதாரணமானவர்களுங் கூட நகைக்கத் தான் செய்வார்கள். பிரிட்டனின் விமானப் படையில் பெரும் பகுதியை அழித்து விட்டார்கள். அதே மூச்சில், தம் நகரங்களில் ஒன்று இருந்த விடந் தெரியாமல் மறைந்து விட்டதாம்!

இந்தியர்களின் தாராளம்

இவர்களுடைய தாராளத் தன்மைக்கு ஈடாக, சென்னை கவர்னர் யுத்த நிதிக்கு உதவியவர்களின் தாராளத் தன்மையை ஒப்பிட்டுக் கூறலாமோ? பிரிட்டனின் பாதுகாப்புக் கென்று ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. மூன்று போராடும் விமானக் கோஷ்டிகளும், இரண்டு வெடிகுண்டு விமானக் கோஷ்டிகளும் ஏற்படுவதற்குப் பணங் கொடுத்து உதவியவர்கள் சென்னை மாகாண வாசிகள் தான். இந்த ஒவ்வொரு கோஷ்டியிலும் உள்ளவர்கள் டி. எப். சி., டி. சி. எம். முதலிய கௌரவப் பட்டங்கள் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் ஆற்றியுள்ள அருந் தொண்டுகள் சென்னை வாசிகளுக்குப் பெருமை தருவனவாகும். போராடும் படையினரின் வசதிகளுக்காக 28 லட்சம் ரூபாய் வசூலாயிருக்கிறது. இராணுவ வாழ்க்கையின் அசௌகரியங்களையும் மனச் சோர்வையும் போக்குவதற்கு, பல வகைகளிலும் உதவ முடிந்தது. கடற் படையையும் மறந்து விடவில்லை. மாலுமிகளுக்கென்று வசூலிக்கப்பட்ட 'கிங் ஜார்ஜ்' நிதிக்கு $2\frac{1}{2}$ லட்சம் ரூபாய் வசூலானது. கப்பற் படையைச் சேர்ந்த 'லஸ்கர்'களுடைய நிலைமை முன்னேற்றப் படவேண்டும். அவர்கள் எவ்வகைக் குறைபாட்டையும் பொருட்படுத்தாது வீரத்தோடு கடலில் போராடுகிறவர்கள். இவர்களுக் கென்று வசூலிக்கப்படும் 'ஸ்ரீமதி எமரி இந்திய வசதிகள்' நிதிக்கு 3 லட்சம் ரூபாய் அனுப்பப் பட்டது. ரஷ்யாவுக்கும், சீனாவுக்கும், கிரீசுக்கும் உதவியனுப்பப் பட்டது. எதிரி கைப் பற்றிய நாடுகளிலிருந்து வந்து சரண் புகுந்தவர்களுக்கு 1 லட்சம் ரூபாய் வரை உதவப் பட்டது. வைத்தியப் பொருட்களுக்காக, கூட்டு யுத்த உதவிக் கமிட்டியார் $3\frac{1}{2}$ லட்சம் ரூபாய் செலவழித் திருக்கிறார்கள். இம்மாகாணத்திலுள்ள படைகளுக்கும், வெளி மாகாணங்களிலும் பிற நாடுகளிலுமுள்ள இந்தியப் படையினருக்கும் கிருஸ்மஸ் பண்டிகை கொண்டாட, உதவினர். எது கேட்டாலும், ஒரு பெரிய பியானோ முதல், நூல் கண்டு வரையிலும் கேட்டவுடனே கொடுக்கக் கூடிய நிலைமையிலிருந்தனர். இது அவர்களுக்கு சர்வ சாதாரணமான வேலை.

உங்கள் மனதில் பதிய வேண்டிய எண்ணம்

சென்னை கவர்னர் யுத்த நிதியைக் கொண்டு செய்யப்பட்ட வேலைகளில் ஒரு சில தான், இவை. இது போல, செலவிடத் தக்க காரியங்கள் பல உண்டு. உதாரணமாக 100 'ஆம்புலென்ஸ்' வண்டிகளை சென்னை உதவியிருக்கிறது. இம் மாகாணவாசிகளின் தாராளத் தன்மையினால் தான், இந்த நன்மை கிடைத்தது. ஆகவே, இவை யெல்லாம் செய்யத் தக்கன வென்றும், மேலும் தொடர்ந்து நடக்கத் தக்கன வென்றும் தான் நீங்கள் நினைப்பீர்கள். இன்னும் 33 லட்ச ரூபாய் நீங்கள் கொடுத்து உதவுவீர்களானால், நீங்கள் இது வரை கொடுத்துதவிய மொத்தத் தொகை 3 கோடி ரூபாயாகும். இந்த எண்ணம் உங்கள் மனதில் பதிந்திருக்க வேண்டு மென்பதே என் அவா.

(7-ம் பக்கம் தொடர்ச்சி.)

ஆதிக்கத்தி லிருந்து விடுபட வேண்டுமென்று இத்தாலிய மக்கள் கொண்டிருந்த ஆசை எப்படி கொழுந்துவிட்டு எரிந்ததோ, அதேபோல், அடிமைப் பட்ட நாடுகளிலும் அத்தகைய ஆசை விரைவில் கொழுந்து விட்டு எரியும் என்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சொன்னது, விரைவில் நடக்கும் என்பதற்கு ஐயமில்லை.

அட்லான்டிக் மதிலைப் பற்றி ஜெர்மானியர்கள் ஜம்பம்

இவ்வாறு கேவலமான ஊழல்களைக் காப்பாற்றி வரும் அந்த மகத்தான அட்லாண்டிக் மதிலைப் பற்றி, ஜெர்மானியர்கள் பெருமையாகப் பேசிக்கொண்டு வருவது என்னவென்றால் "ஐரோப்பா முழுவதுமே முதல் முதல் ஒன்று சேர்த்து சாதித்த மகத்தான வேலை இதுவே" என்பதாம். எகிப்து தேச கோபுரங்களுக்குப் பின், இதைப் போல பெரியதோர் நிர்மாண வேலையில் வேறு சிறந்தது ஒன்றும் இல்லையென்றும் ஜெர்மன் பத்திரிகைகள் பலவிதமாகப் பெருமை பாராட்டி யிருக்கின்றன. இத்தகைய பாதுகாப்புக்குள், ஜெர்மானியர்கள் சுதந்தரமான தேர்தல்கள் வாழ்க்கையின் உரிமைகள், இன்ப வாழ்க்கை, முதலியவற்றை எல்லோருக்கும் அளிப்பதாக உறுதி கூறுகிறார்கள்.

"சிங்காரக் கொண்டையாம்.. உள்ளே ஈரும் பேனும்" என்பது,தகும். ஹா, ஹா, என்ன அற்புதமான ஒரு புதிய ஏற்பாடு! இதில் காணப்படும் நூதனமான ஏற்பாடு ஒன்றே ஒன்று தான். அதாவது சைனா மதிலைக் காட்டிலும் 125 மைல் நீளமுள்ளது ஒன்று தான். இந்த அற்புதமான அமைப்பைக் காட்ட, டச்சு நாட்டுக் கரையிலுள்ள இந்த மதிலின் ஓர் பாகத்தை புகைப் படம் பிடித்து வெளியிட்டிருக்கிறார்கள். இந்தக் கூறை இல்லாக் கோட்டையினால் தாங்கள் எதிர்பார்க்கும் லாபம் ஏற்படக் கூடுமா என்று வியந்து நிற்கிறார்கள்.

தெற்கிலும் கிழக்கிலும் சந்துக்கள் நிறைந்த இந்த மதில் சுவர், தற்கால நாகரிகத்துக்கு ஏற்பட்டதாகத் தோன்றவில்லை. ஏனெனில், அமெரிக்கர்களாலும், ஆங்கிலேயர்களாலும் சாமர்த்தியமாகக் கட்டப்பட்ட பெருத்த விமானங்களாகிய பறக்கும் கோட்டைகளை இந்த மதில் சுவர் எவ்வாறு உள்ளே வராமல் தடுக்க முடியும்? ஐயோ பாவம்! இந்த ஐரோப்பிய மதிலுக்கு ஒரு பலமான மேல் கூறையில்லாதது ஒரு பெருங் குறையே தான்.

ஒரு நாட்டிற்கு அதன் மக்களின் பலந் தான் முக்கியம்

ஒரு நாட்டிற்கு பலம் கோட்டைகளல்ல. அதன் மக்களே யாவர் என்று சாக்ரிடிஸ் என்ற தத்துவ ஞானியார் கூறியுள்ளதை ஹிட்லர் மறந்தார் போலும். உதாரணமாக மகத்தான படை பலங்களிருந்தும், மக்களின் ஆதரவில்லாத இத்தாலி, மூழ்கிவிட்டது. அவர்களின் ஆதரவு பெற்ற நேச நாடுகள் உலகோரால் வியக்கத் தக்க பல மகத்தான வெற்றிகள் பெற்றன. இன்னும் பெறப் போகின்றன.

எனவே ஹிட்லரின் ஐரோப்பா-கோட்டையின் வீண் டம்பப் பேச்சுகளையும் அந்த விசித்திரக் கோட்டையின் ஊழல்களையும் கருதுங் காலத்தில், முற்றிலும் முன்னுக்குப் பின் முரணாகவே இருக்கின்றது என்று உலகோர் விரைவில் அறியலாம்.

. அங்கும், இங்கும்

எப்படியும் ஜப்பானியர்களை பர்மாவிலிருந்து விரட்டிவிடுவது; பர்மா சாலையை மறுபடியும் திறந்து, சீனத்திற்குத் தாராளமாக உதவி போகச் செய்வது; அது வரை சும்மா இருப்பதில்லை; வேறு ஒரு பாதையை சிருஷ்டிப்பது என்று நேச நாட்டார் கங்கணம் கட்டிக் கொண்டார்கள். அதற்கான பிளான்கள், ஆராய்ச்சிகள் எல்லாம் முடிந்து, மடமடவென வேலையும் ஆரம்பமாகிவிட்டது. இந்த வேலையிலே மலை ஜாதியார்கள் நிறைய உற்சாகத்தோடு பங்கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மட்டுமில்லை. பெரிய பெரிய யானைகள் கூட, இந்த வேலையின் அவசியத்தை நன்றாகத் தெரிந்து கொண்டது போல, ஓடி ஓடி, ஓடி ஓடி வேலை செய்கின்றன. பிரமாண்டமான மரங்களைத் தூக்கி, அலக்ஷியமாக எறிந்து விடுகின்றன. மரங்களையும், மூங்கிற் புதர்களை நாசூக்காக, அழகுணர்ந்து வெட்டித் தள்ள இப்பொழுது முடியுமா என்ன? அதற்கென்று ஒரு யந்திரம் இருக்கிறது. கிராப் வெட்ட உள்ள மெஷின் செய்வது போல, இது வெகு எளிதில் எல்லா வற்றையும் அகற்றி விடும். பாறைகளை உடைக்க, தனி யந்திரங்கள். எல்லாம் மயன் செய்த வேலை போலவே இருக்கிறது. இந்த வேலை எல்லாம் முடிந்த பிறகு, நாம் அங்கு போய்ப் பார்த்தால், 'எ அப்பா! எப்படிடா போட்டாங்க ரோட்டு, இந்த இடத்தில் எல்லாம்! ராக்ஷஸ வேலை தான் செய்திருக்கிறார்கள்' என்று கூசாது 'சர்டிபிகேட்' கொடுத்து விடுவோம். அங்குள்ள மலை ஜாதியினர் பெரிய பள்ளத் தாக்குகளையும், நதிகளையும் கடக்கும் தீரத்தைப் பார்த்தால், மகா பிரமிப்பாக இருக்கிறதாம். நாளை, நேச தேசத்தார் ஜப்பானியர் எதிரில் போய் ஆயுத பாணிகளாக நிற்கும் பொழுது, ஜப்பானியர் எப்படி பிரமிக்கப் போகிறார்கள் தெரியுமா? அவர்கள் தான் தங்களுடைய ஆட்டங்களை யெல்லாம் ஆடித் தீர்த்து விட்டார்களே! இப்பொழுது எங்கும் நம்மவர்கள் தானே முன்னேறும் ஆட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்!

* * * * *

சைனியத்தின் கண்கள்

தினம் இருபத்தி நான்கு மணி நேரமும் கிழக்கு வங்காளத்தில் ஒரே போட்டியாக இருந்து வருகிறதாம். சோற்றுக்கு வழி செய்து கொள்ளுவதில் அல்ல. அந்த மாதிரி சோற்றுக் கில்லாமலிருப்பவர்களைத் தான் அரசாங்கத்தாரும், இராணுவத்தாரும், பொது ஜனங்களும் பாது காக்க வழிகள் செய்து கொண்டிருக்கிறார்களே! நாம் இங்கே குறிப்பிட்ட போட்டி, கிழக்கு வங்காளத்தில் பல இடங்களில் உள்ள ஆர்.ஏ.எப். விமானிகளிடை ஏற்பட்டுக் கொண்டிருக்கும் போட்டி; பர்மாவில் இருக்கும் ஜப்பானியர் மீது குண்டு வீசுவதில் தான் பிரமாத போட்டி யிருந்து வருகிறது. மோசமான கால நிலைமையிலும் துணிந்து சென்று, எதிரியின் நிலைமையை மோசமாக்குவதில் உத்சாகங் கொள்ளுவோர் பலரிருக்கிறார்கள்.

பர்மாவி லிருக்கும் நதிகளில் ஏராளமான விரோதிப் படகுகளும், சிறு கப்பல்களும் சாமானை ஏற்றிச் சென்ற வண்ணமாகவே இருக்கின்றன. அந்தப் படகுகளையும், கப்பல்களையும் மேற் கண்ட விமானிகள் 'அரோஹரா!' ஆக்கி வருகிறார்கள். இந்திய எல்லையில் பதுங்கி இருந்து வாலாட்டப் பார்க்கும் ஜப்பானிய கோஷ்டிகளையும் சிதற அடிக்கிறார்கள். ரங்கூன், மாண்டலே, மாங்டௌ போன்ற நகர்களில் இருக்கும் ஜப்பானியருக்கு இவர்கள் ஓய்வே கொடுப்பதில்லை.

இம்மாதிரி உள்ள விமானிகளிடை, வேவு பார்க்கும் கோஷ்டியார் பலரிருக்கிறார்கள். எதிரி என்ன செய்கிறான் என்று பார்த்து வந்து, வெடி குண்டு விமானிகளிடம் கூற வேண்டியதே இவர்கள் வேலை. இந்த கோஷ்டிகளில் ஒன்று ஆயிரம் தடவை பர்மா மீது சென்று வந்து, 'சைனியத்தின் கண்கள்' என்ற பட்டத்தைப் பெற்றிருக்கிறதாம். இந்த ஆகாயக் கண்கள் இல்லாமல் தரைப் படை என்ன செய்ய முடியும்?

* * * * *

மேற்கே, அதாவது ஐரோப்பாவிலே, இரண்டாவது போர் முனை தொடங்கினால் தான் யுத்தம் சீக்கிரமே முடி வடையும் என்று ஸ்டாலின் துரை சொன்னார். அந்த இரண்டாவது போர் முனை எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்பதை இப்பொழுது சொல்வதற்கில்லை. அது பல விஷயங்களைப் பொருத்திருக்கிறது.

ஜப்பானியர் அகலக் கால்

ஆனால், கிழக்கிலே இரண்டாவது போர் முனை நிச்சயம் ஆரம்பிக்கப்படும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. தென் மேற்குப் பஸிபிக் பிரதேசத்திலே, வெற்றிமேல் வெற்றியாக அடுக்கிக் கொண்டிருக்கிறார் ஜெனரல் மக் ஆர்தர் துரை.

ஜப்பானியருக்கு அந்தப் பிரதேசத்திலே உயிர் கொடுத்துக் கொண்டிருப்பது 'ரபால்' என்ற இடம் தான். அங்கே பிரமாண்டமான துறைமுகம் இருக்கிறது. அதிலே ஏராளமான யுத்தக் கப்பல்களும், மற்றக் கப்பல்களும் ஜப்பானியரால் வைக்கப்பட்டிருக்கின்றன.

அந்த இடத்திற்கு ஆபத்து உண்டாக்க பல திட்டங்கள் போட்டிருக்கிறார் மக் ஆர்தர். அந்த இடத்திற்கு அருகே உள்ள போஜன்பில்லா தீவிலே அமெரிக்கர் போய் இறங்கினர். அப்புறம் ஜப்பானியரும் அத்தீவிலே ஆட்களைக் கொண்டு இறக்கினர். இப்பொழுது அங்கு கடுமையான போர் நடந்து கொண்டிருக்கிறது.

இது ஒரு புறமிருக்க, ரபால் துறைமுகத்தை அநுதினமும் ஆகாயத்திலிருந்து தாக்கி வருகிறார்கள் நேச தேச விமானிகள். பல ஜப்பானிய யுத்தக் கப்பல்கள் நாசமாகி விட்டன. இன்னும் பல ஜலத்திற்கடியில் போகக் கூடும். நேச தேச குண்டு வீச்சால், ரபால் துறைமுகம் வரவர ஆபத்து நிறைந்த இடமாக ஆகிவருவதால், அங்கிருந்த கப்பல்கள் எல்லாம் வேறு எங்கோ போய்ப் பதுங்கிக் கொண்டிருக்கின்றன. ரபால் துறைமுகத்தின் மீது சென்ற நமது விமானங்களைத் தடுக்க வந்து, நூற்றைம்பது ஜப்பானிய விமானங்கள் பலியாகிவிட்டன. இப்பொழுது லாபம் ஏது மில்லாவிட்டாலும், ஜப்பானியருக்கு நஷ்டங்கள் மட்டும் ரொம்ப பலமாக இருக்கிறது.

அவர்கள் அகலக் கால் வைத்த அழகைப் பார்த்து உலகமே சிரித்துக் கொண்டிருக்கிறது. அவ்வளவு அகலக் கால் வைத்து விட்டு, கால் வைத்த இடங்களுக்கெல்லாம் உதவியும், உணவும் பல கப்பல்களில் கொண்டு செல்ல வேண்டி யிருக்கிறது.

அந்த சப்ளை மார்க்கத்திற்கு குறுக்கே பாய்ந்து வருகிறார்கள் மக் ஆர்தரின் கட்டளைப்படி நடப்பவர்கள். ஒரு புறம், ஜப்பானியர் வசமுள்ள தீவுகளை ஒவ்வொன்றாகப் பிடிக்கும் ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது. அதை விட, இன்னொரு புறம் நடக்கும் வேலை தான் வெகு ஜோராக இருந்து வருகிறது.

ஜப்பானியரைப் பாதையில் மடக்குவது

ஜப்பானியரின் சப்ளைப் பாதைகளில் புகுந்து நொறுக்கி அவர்களைச் சாக அடிப்பதே இந்த வேலை முறையாகும். இதோடு, அடிக்கடி ஜப்பானியர் குவிந்து கிடக்கும் இடங்களையும் நொறுக்கி, அவர்களது பலத்தைக் குறைக்கவும் செய்கிறார்கள். அவர்களது யுத்தக் கப்பல்கள் ஒவ்வொன்றாக, நின்ற இடத்திலேயே, போரே புரியாமல், சோம்பேறிகள் போலிருந்து ஜலத்தில் மூழ்கிக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு வெகு காலம் நடந்து கொண்டிருக்க முடியாது. என்றாவது ஒரு நாள் ஜப்பானியக் கப்பற் படை, ஆத்திரம் தாளாது வெளியே வந்து போராடத் தான் வேண்டும். அதைத் தான் நம்மவர்களும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரியான போர், யுத்தத்தின் முடிவை சமீபத்தில் கொண்டு வந்து விடும் என்பது நம்மவர்கள் கருத்து. நமது கப்பற் படையும், விமான பலமும் ஜப்பானியர்களது கனவுகளில் தோன்றி அவர்களை உளற அடிக்க வைத்துக் கொண்டிருக்கும் என்று கூடச் சொல்லலாம்.

எங்குமே ஜெயமில்லை என்பதைக் கண்டு ஜப்பானிய மக்கள் வெறுப்படையப் போகிறார்களே என்பதற்காக, ஜப்பானிய பிரசார இலாகாவினர் ஏதாவது புளுகிக் கொண்டே யிருக்கிறார்கள். 'அமெரிக்கக் கடற் படையில் பெரும் பகுதியைத் தொலைத்து விட்டோம். இந்தியா மீது படையெடுக்க பெரிய சேனையைத் தயாரித்து விட்டோம், இதோ சென்னை மீது சென்று அளவற்ற சேதத்தை உண்டாக்கி விட்டோம்' என்றெல்லாம் 'கப்ஸா'க்களை அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

போன வாரம், அதாவது நவம்பர் 11-ந் தேதியன்றும், அக்டோபர் 11உ-ல் வந்தது போலவே, சென்னை நகரைக் கவனிக்க வந்தார்கள் ஜப்பானியர்கள். ஆனால், அவர்களால் சென்னை நகரை அணுகவும் முடியவில்லை. எல்லோரும் உஷாராக இருப்பது கண்டு, உயிர் மீது ஆசை கொண்டு ஓடி விட்டார்கள். ஆனால் இலங்கையில் சென்று இரு விமானிகள் வாலாட்ட, ஒருவரது வாலை அங்குள்ள பாதுகாப்பாளர் ஒட்ட அறுத்து விட்டார்கள்.

இப்பொழுது ஜப்பானியர் புதிதாக ஒரு விஷயத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். திரிகோணமலையில் ஏராளமான கப்பல்கள் குவிந்திருப்பதாகவும், கூடிய சீக்கிரமே வங்காளக் குடாக் கடலில் பெரிய கடற் போர் நடக்கக் கூடுமென்றும் சொல்லுகிறார்கள்.

மௌண்ட் பாட்டன் பிரபு தீர்மானம்

பர்மாவைப் பிடிப்ப தென்று மௌண்ட்பாட்டன் பிரபு தீர்மானித்திருக்கிறார்; சீனரோடு கலந்து அது விஷயமாக என்ன செய்வதென்று முடிவு கட்டி யிருக்கிறார். ஜப்பானியரை இறுதியாகத் தோற்கடிக்க பர்மாவிலிருந்து அவர்களைத் துரத்தி யடிக்க வேண்டும் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளுவார்கள். ஆகவே, வங்காளக் குடாக் கடலில் போர் நடக்குமென்று அவர்கள் ஜோசியம் சொல்லியாக வேண்டுமா என்ன?

ஜப்பானுக்கு பாது காப்பு 'பெல்ட்' எது என்று வைத்திருக்கிறார்கள் தெரியுமா? பர்மா, மலேயா, சிங்கப்பூர், ஜாவா, நியூ கினியா, ரபால் வழியாக ஓடும் கோட்டிற்குள் அடங்கியுள்ள பிரதேசங்களை யெல்லாம் தான். இந்த 'பெல்ட்'டைக் கிழித் தெறிவதே நம்மவர்களது வேலை. சிரமமான வேலை தான். ஆனாலும் செய்யாது இருக்கக் கூடியதல்ல. அமெரிக்காவில் இதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து கொண்டிருக்கின்றன. முத்துத் துறை முகத்தை யுத்த ஆரம்பத்தில் தாக்கியது போல், மற்றொரு தடவை ஜப்பானியர் தாக்க முயலக் கூடும் என்கிறார் ஒருவர். அதிலிருந்தே அத்துறை முகத்தில் பிரமாதமான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று எண்ணுவதில் தவறு ஒன்று மில்லையே!

அமெரிக்காவிலே போன வாரம், ஜனாதிபதி ரூஸ்வெல்ட் தலைமையிலே நாற்பத்தி நான்கு நேச நாடுகளின் பிரதி நிதிகள் ஒன்று கூடிப் பேசியிருக்கிறார்கள். யுத்தத்திற்குப் பின், விரோதியிடமிருந்து மீட்கப் பெற்ற நாடுகளில் உள்ளவர்களது கஷ்டங்களைப் போக்கி, அவர்களைக் குடியும் குடித்தனமுமாக இருக்கச் செய்ய இவர்கள் திட்டங்கள் போட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு தேசமும், கட்டாயம் ஏதுமின்றி, தானாகவே இந்தக் கமிட்டிக்கு பணமனுப்பலாமாம். ஏராளமான பணம் என்னமோ தேவையாக இருக்கும்! ஆனால், இவ்வுலகிலே பரோபகார சிந்தையுள்ளவர்களும் ஏராளமாக இருப்பார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

ஹிட்லரைச் சுற்றி வர சரியான சுருக்குக் கயிறு ஒன்று நெருங்கிக் கொண்டே வருகிறது. அது 'சமாதானக் கயிறு' என்று கூறப்படுகிறது. ருஷ்யாவிற்கும் வேறு சில நாடுகளுக்கும் ஒன்றைத் தொடர்ந்து ஒன்றாக பல சமாதான உடன்படிக்கைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ருஷ்யாவைக் கண்டு ஜெர்மனிக்கு எவ்வளவுக் கெவ்வளவு பீதியோ, அதைவிட இந்த உடன்படிக்கைகளைக் கண்டு அதற்குப் பீதி அதிகரித்திருக்க வேண்டும் என்றே நினைக்கிறோம். ஜெர்மனிக்கு இந்தப் பீதி அதிகமாக ஆக, ருஷ்யாவின் சக்தி அதிகமாக ஆக, ஜெர்மனியின் ஆதிக்கத்திலகப்பட்ட நாட்டினருக்கெல்லாம் ஒரு தைரியம் ஏற்படக் கூடும். ஜெர்மானியர் சற்று சளைத்திருக்கும் போது, இத்தகைய நாடுகளில் எல்லாம் ஏகக் கலவரம் ஏற்படும் என்பது நிச்சயம்.

ஹிட்லர் திணறல் தமாஷாயிருக்கிறது

இப்பொழுது ஹிட்லர் திணறும் திணறலைப் பார்த்தால், தமாஷாகவே இருக்கிறது. இது வரை, தானே சர்வமும் என்றெண்ணியிருந்த அவர், தமது சேனாபதிகளைக் கூப்பிட்டு, 'ருஷ்யச் சக்தியிலே தெரியாமல் போய் மாட்டிக் கொண்டு விட்டோமே; எழவு! இதிலிருந்து தலை தப்புவது எப்படி சொல்லுங்கள்' என்று கேட்டிருக்கிறாராம்.

அவர்களில் ஒருவர் சொல்லுகிறாராம்: "பேசாது இன்னும் வெகு தூரம் பத்திரமாகப் பின் வாங்குவோம். அவ்வளவு தூரம் ருஷ்யர்கள் உதவி கொண்டு வர முடியாது அவதிப்படுவார்கள்" என்கிறாராம்.

இன்னொருவர் சொல்லுகிறாராம் "பக் நதி (மூட்டைப் பூச்சிக்கும் இந்த நதியின் பெயருக்கும் சம்பந்த மேதுமில்லை என்று நினைக்கிறோம்) ஓரத்திலே, பனி கால அரண் ஒன்றை அமைக்கலாம்" என்று.

மூன்றாமவர் பெரிய சூரர், "மானம் போய் வாழ்வதா? மதிப்பே முதல். எது வந்தாலும் வரட்டும். எவ்வளவு நஷ்டமானாலும் பரவாயில்லை. சோவியத் படைகளை எவ்வகையாலாவது தடுத்து நிறுத்தியே ஆகவேண்டும். இதற்காக கையிருப்பில் உள்ள படைகளைக் கூட உபயோகப்படுத்த வேண்டி யிருந்தாலும், கவலைப் படக்கூடாது" என்கிறாராம் அவர்.

என்ன சொல்வார் ஹிட்லர், பிறர் சொல்லிக் கேட்கும் குணம் தான் அவருக்குக் கிடையாதே! ருஷ்யர்களோ திடீர் திடீரென்று எங்கெங்கோ புதுத் தாக்குதல்களை ஆரம்பிக்கிறார்கள். கிரிமியாவிலே கடும் போர் நடக்கிறது. அந்தப் பிரதேசம் வெகு முக்கியமானது என்பது ஜெர்மானியர் அங்கே விமான மூலமாகவும், தரை மூலமாகவும் ஏராளமான படைகளைக் கொண்டு குவிப்பதிலிருந்தும், மேலும் மேலும் முன்னேறித் தாக்க முயலுவதி லிருந்தும் தெரிகிறது. கெர்ச் என்ற துறை முகத்தை ருஷ்யர்களும், ஜெர்மானியரும் சுட்டுத் தள்ளுகிறார்கள். அதில் உள்ள ஜெர்மானியரைக் கிளப்ப எதிர்க் கரையிலிருந்து ருஷ்யர்கள் பீரங்கிகளால் சுட்டுத் தள்ளுகிறார்கள். ஜெர்மானியரோ கெர்ச் நகர் இனி நமக்கு வாய்த்திருக்கப் போவதில்லை. அதனால் இதைச் சுட்டெரித்து விடலாம் என்று அந்நகருக்கு, தீ மூட்டி எரிக்கிறார்கள். வானமளாவ தீ உயர்ந்து எரிகிறது. அந்நகரம் சுத்த சூன்ய நகரமாகி விட்டது.

கிரிமியப் போர் ஒரு புற மிருக்க, வெள்ளை ருஷ்யாவில் பிரமாதமான யுத்தம் நடக்கிறது. அடி தாளாது சுருண்டு சுருண்டு, துடி துடித்துப் பின் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் ஜெர்மானியர்.

வட ருஷ்யாவிலும், யூக்ரேன் பிரதேசத்திலும் வெள்ளை வெளேரென்று பனி விழத் தொடங்கி விட்டதாம். பொங்கிப் பாய்ந்துக் கொண்டிருந்த ஆறுகளிலும், பயங்கரமான ஐஸ்கட்டிகள் ஏற்பட்டு விட்டன. நிலையில் நிற்கும் மரங்கள், வண்டிகள், ஆட்கள் எல்லாம் பனிக் கட்டியால் மூடப்படுகின்றன. ரயில்ச் பாதைகளை சதா வெட்டிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. மடமடவென நடந்தோம் என்பதில்லை. வழுக்கி விழுந்தால் மண்டை உடைந்துபோகும். குளிரோ சகிக்க முடியாது.

குளிர் காலத்திற்கு ரஷ்யர்கள் ஆயத்தங்கள்

ருஷ்ய வீரர்கள் இந்த சீதோஷ்ண நிலைமையின் மாறுதலுக் கேற்றபடி தங்களுடைய நிலைமையையும் மாற்றிக் கொண்டு விட்டார்கள். கனத்த கம்பளிச் சட்டைகளை அணிந்து கொண்டு விட்டார்கள். மோட்டார்களுக்கும், மற்ற வாகனங்களுக்கும் வழுக்கல் சக்கரம் பூட்டிவிட்டார்கள். ருஷ்ய வீரர்கள் தங்கள் கால்களுக்கும் வழுக்கல் பூட்ஸ்களை மாட்டி விட்டார்கள். சாதாரணமாக நடப்பதைப் போல, பல மடங்கு வேகத்தில் மின்னல் வேகத்தில் பனி மீது சருக்கி வந்து, வெட்டித் தள்ளப் போகிறார்கள் ஜெர்மானியரை. ஜெர்மானியர் இந்தக் குளிர் காலத்திலே தங்க நினைத்திருந்த இடம் வேறே. இப்பொழுது அதற்குப் பல நூறு மைல்கள் மேற்கே ஓடிவந்திருக்கிறார்கள். வந்த இடங்களில் எல்லாம் வசதிகள் காத்திருக்குமா என்ன? ஆகவே இயற்கை யன்னையும் தன்னாலியன்ற அளவு அவர்களை வாட்டப் போகிறாள். வாட்டமாட்டாளா என்ன? அவளது சுந்தர முகத்தை. கோரமாகத் தோற்றும்படி அதன் மீது ரத்த வெள்ளத்தை ஓடச் செய்தவர்கள் ஜெர்மானியர்கள் தானே? அந்த ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ள அவள் விரும்பமாட்டாளா என்ன?

"இன்னும் ஒரு மண்டலம் கழிந்தால், புது வருஷம் பிறந்துவிடும். அது லீப் வருஷம், மகாமக வருஷம். 'இந்த வருஷத்திலே, ஐரோப்பியப் போர் மிகக் கடுமையானதாக மாறும்; பிரிட்டனிலும், அமெரிக்காவிலுமுள்ள பல குடும்பங்கள் எழவு சேதிகளைக் கேட்க வேண்டி வரும். அடியுண்ட புலி போல, ஹிட்லர் உலகோர் மீதுள்ள தனது ஆத்திரத்தை இங்கிலாந்து மீது காட்ட முயலக் கூடும். நாம் பிரமாண்டமான புது தாக்குதல்களை ஆரம்பிப்போம். அதிலேயும் ஏகச் சேதம் ஏற்படலாம். அதெல்லாம் தவிர்க்க முடியாததாகும். நமது பிள்ளைகள், அவர்களது பிள்ளைகள் இவ்வாறு நமது வருங்கால சந்ததிகளின் க்ஷேமத்தை நிரந்தரமான தாக்க, நாம் கடுந் தியாகங்களைச் செய்தே ஆகவேண்டும்' என்று சர்ச்சில் பேசி யிருக்கிறார்.

இது என்னடா எப்பொழுது பேசினாலும் இப்படியே கஷ்டங்களைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறார் இவர், என்று நீங்கள் நினைக்கலாம். யுத்தம் என்று எப்பொழுது ஆரம்பமாயிற்றோ, அது முடியும் வரை சுகத்தை யாராவது எதிர்பார்க்கலாமா? ஒரு பெரிய வெற்றி கிடைத்து விட்டதென்று சும்மா இருந்துவிடமுடியுமா?

ருஷ்யர்கள் இருக்கிறார்கள். ஸ்டாலின்கிராட் நகரிலே அவர்கள் மகோன்னதமான வெற்றியைக் கண்டார்கள். அதோடு நின்றுவிட்டார்களா? அவ்வாறு நின்றிருந்தால், யுத்தத்தின் போக்கே இன்று மாறியிருக்குமே!

யுத்தம் சம்பந்தப்பட்ட வரை நிறைய ஆபத்துக்களுக்கு நாம் தயாராக இருந்தால் தான், பிழைக்கலாம். குறைந்த ஆபத்துக்களை மனதில் கொண்டு 'வரட்டும்! பார்க்கலாம்' என்றிருந்தால், பெரிய ஆபத்துக்கள் வரும்பொழுது, 'அப்பொழுதே தெரியாமல் போச்சே!' என்று வருத்தப்படத்தான் வேண்டிவரும்.

ஹிட்லருக்குக் கடைசித் தலைவலி

அந்த நிலைமையில் பிரிட்டிஷ் மக்களைக் கொண்டுவிடத் தயாராக இல்லை, பிரதம மந்திரி சர்ச்சில் அர்த்தமில்லாது, வீண் நம்பிக்கையூட்டும் மொழிகளைக் கூறுவதேயில்லை. வருகிற வருஷம் யுத்தம் வெகுக் கடுமையாக இருக்கும் என்று அவர் சொல்லுகிறார் என்றால், பிரமாதமான திட்டங்கள் வகுக்கப்பட்டு, அமுலில் படுத்தப்பட தயாராக இருக்கின்றன என்று நாம் தைரியமாகக் கொள்ளலாம். ஹிட்லருக்கும் இறுதித் தலைவலி வரக் காத்திருக்கிறது என்று கூசாமல் சொல்லலாம்.

ஹிட்லர் தமது விமானப்படைகளின் சக்தியைக் குறித்துப் பிரமாத ஜம்பமடித்துக் கொண்டிருந்தார். அந்தக் காலமெல்லாம் போய், இப்பொழுது, ஒன்றிரண்டு விமானங்களே திருட்டுத் தனமாக லண்டன் மீது பறக்க முடிகிறது. போனவாரம், ஒரு நடனக் கொட்டகை மீது ஹிட்லரின் தூதர்களில் ஒருவர் வீசிய குண்டு விழுந்து, ஏகச் சேதமேற்பட்டது, இதெல்லாம் ஹிட்லரைச் சீக்கிரமே முடித்தனுப்ப வேண்டுமென்ற எண்ணத்தை அதிகப்படுத்துமே ஒழிய வேறொன்றும் செய்யாது.

ஹிட்லர் தமது விமானப் படைக்கு அடுத்தபடியாக வலு மிக்க ஆயுதமாக நினைத்திருந்தது நீர்மூழ்கிப் படையைத் தான். அந்த நீர்மூழ்கிகள், நேசதேசக் கப்பல்களுக்குப் பெரிய யமனாக இருந்தது உண்மை. அந்தக் காலமும் மலையேறிவிட்டது.

'யு படகுகளின் முதுகெலும்பை முறித்துவிட்டோம்' என்றார் சர்ச்சில், வாஸ்தவம்! முன்போல், அந்த நீர்மூழ்கிகள் தைரியமாக எங்கும் சுற்ற முடிய வில்லை. அவற்றைக் கவனிக்கவே ஒரு தனிப்படை ஏற்பாடாகிவிட்டது.

இதைக் கண்ட ஹிட்லர், நாசகாரிக் கப்பல்களைப் போலவே புதுமாதிரியான, பிரமாண்டமான நீர் மூழ்கிகளைத் தயாரித் தனுப்பி வருகிறார். இந்த நீர்மூழ்கிகள் மீது, பெரிய பெரிய பீரங்கிகள் பல இருக்கின்றனவாம், ஆகவே, இவை தைரியமாக வெகு நேரம் ஜலமட்டத்தி லிருந்தே நமது கப்பல்களோடு போர்புரிகின்றனவாம். இவையெல்லாம் நமக்கு இனி சிறு பிடுங்கல்களாக இருக்குமே ஒழிய, நம்மவர்களைத் தோற்கடித்து, வெற்றி கண்டு விடமுடியாது. ஹிட்லரும், அவரது கொள்கைகளும் ஒழிவது நிச்சயம். ஆனால் ஒழியும் காலம் எது என்பதை மட்டும் இப்பொழுது திட்டமாகக் கூறுவதற்கில்லை.

மழைக்குக் கிடைத்த ஓட்டைக் குடை

பெர்லின் நகர் மீது எண்பத்து இரண்டு தடவைகள் நேசதேச விமானங்கள் குண்டுகளைப் பொழிந்தாயிற்று. ஏக நஷ்டம். பெர்லின் தவிர, இதர ஜெர்மன் நகரங்களுக்கும் அதே கதி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஹிட்லர் ஆளுகைக்குக் கீழ் எங்கிருந்தாலும், ஓட்டைக் குடைக்கு அடியிலே கொட்டுகிற மழையின்போது குந்திக்கொண்டிருப்பது போல் தானிருக்கிறது.

இத்தாலியிலே, ஜெர்மானியர் லேசிலே விடுவதில்லை. மழைத் தொந்தரை வேறே. ஆனாலும் நேசதேசப் படைகளே முன்னேறிக் கொண்டிருக்கின்றன. ஏட்ரியாடிக்கடற் பிரதேசத்திலே ஆதிக்கம் பெற்றிருக்க ஹிட்லர் பல யத்தனங்களைச் செய்து வருகிறாராம். பிரிட்டிஷ் ஐந்தாவது சேனை வெகு சிரமத்தோடு தான் போராடிக் கொண்டிருக்கிறது. மலைப் பிரதேசங்களில் பனி கொட்டத் தொடங்கிவிட்டதாம். ஆகவே போக்கு வரத்திற்கு இடைஞ்சல் அதிகம் ஏற்படுவது இயற்கை தானே? பனிகாலத்திற் கென்று ஒரு நதிக் கரையிலே ஒரு அரணை ஏற்படுத்த ஜெர்மானியர் திட்டம் போட்டிருந்தார்களாம். ஆனால் அந்த நதியை எதிரிகளின் குண்டு மழையையும் லக்ஷியம் செய்யாது, வீர மிக்க, உலகம் புகழ்பெற்ற எட்டாவது சேனை கடந்து விட்டதாம். இந்த எட்டாவது சேனையை ஹிட்லர் கனவிலும் மறக்கமாட்டார் என்பது உறுதி. எல் அலாமீனில் அது போட்ட போடு தானே, அச்சு நாட்டின் வெற்றித் தராசைத் தட்டிவிட்டு விட்டது!

இத்தாலிக்கு பிரான்ஸ் வழியாக உதவி கொண்டு வந்து கொண்டிருக்கிறார்கள் ஜெர்மானியர். அவ்வாறு வரும் பாதை, மலைகளுக்கு ஊடே வருகிறது. அந்த மலைப் பாதையில் பல இடங்களைப் பிடித்துவிட்டார்களாம நேசதேச விமானிகள். எங்கு போனாலுமா அவஸ்தை என்று துடிக்கிறார்களாம் ஜெர்மானியர்.

ருஷ்யாவில் இத்தனை காலம் ஜெர்மானியர் போராடுகிறார்களே, உண்மை நிலைமை தான் என்ன என்று பார்க்க, சில ஜப்பானிய அதிகாரிகள் ருஷ்யப் போர்முனைக்குச் சென்றார்களாம். யூக்ரேன், கிரிமியா பிரதேசங்களில் எல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்தார்களாம். அவர்கள் உயிரோடு ஊர் திரும்பிவிட்டார்களாம். அவர்களே சொல்லுகிறார்களாம், ருஷ்யாவில் ஜெர்மானியர் தோற்றுவிட்டார்கள் என்று, "கைப்புண்ணுக்கு கண்ணாடி வேணுமா" என்ன?

ஜப்பானியர் இப்பொழுது நேசதேச விமானிகளின் திறமையைக் கண்டு, வெகு கோபங் கொண்டிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமே யில்லை. அவர்கள் தற்சமயம், புது விதமான வெடிகுண்டுகளை உபயோகிக்கிறார்களாம். இந்த குண்டுகள் ஆகாயத்திலேயே வெடிக்கின்றனவாம். இதிலிருந்து, காற்றுப் பட்டாலே, ஈரம் உலர்ந்ததும் எரியும் பாஸ்பரஸ் கலந்த மருந்துகள் சிதறி எரிகின்றனவாம். அவை, நமது விமானங்களில் பட்டால், விமானத்திற்கு தீ விபத்து ஏற்படுகிறதாம்.

'ஓ! இது வல்லாமா செய்கிறீர்கள்? இருங்கள் உங்கள் தொழிற்சாலைகளையே நொறுக்குகிறோம்' என்று நம்மவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு நாள் அதுவும் நடக்காமலா போய்விடப் போகிறது?

ஒரு தமாஷ் பார்த்தீர்களா? நேசதேசத்தார் தங்களது விமானங்களுக்கு எப்படிப்பட்ட பெயர்களை எல்லாம் இட்டிருக்கிறார்கள் என்பதைக் கவனித்தீர்களா? கொசு, அக்னி கக்கி, வல்லூறு, மீட்பவை, இடி முழக்கி இந்தப் பெயர்களைக் கேட்டாலே அச்சுநாட்டார் எக்காலத்திலும் நடுங்கும்படி, இவை தம் பெயருக்கேற்ற பெரும் போடு போட்டுக் கொண்டிருக்கின்றன.

யுத்த நாட் குறிப்புகள்

பிரிட்டனும் ஜெர்மனியும்.

நவம்பர் 9.—பேர்லின், வியென்னு முதலிய பல ஜெர்மன் பட்டணங்கள் வெளியார் உட்புக முடியாதவை யென்று பிரகடனம் செய்யப்பட்டிருக்கின்றன.

ஹிட்லரின் தலைமைக் காரியாலயத்தில் காலிடர்கள் நடத்திய விசேஷக் கூட்டத்தில் ஹிட்லருக்குப் பிறகு யார் அவருடைய பதவியை வகிப்பது என்பது பற்றி விவாதித்ததாக "டேகன்ஸ் நையிடேர்ஸ்" என்னும் பத்திரிகையின் பேர்லின் நிருபர் அறிவிக்கிருர். அப்போது, ஹிட்லர் இறந்து போனல், கோயரிங்கைத் தலைவராகக் கொண்ட 4 பேர்கள் சேர்ந்த கமிட்டியார் நிர்வாகத்தை நடத்தவேண்டு மென்றும், அதில் கோயரிங், ஹிம்லர், கொப்பல்ஸ், போர்மான் ஆகியோர் அங்கத்தினர்களா யிருக்க வேண்டு மென்றும் முடிவு கட்டினர்.

நவம்பர் 10.—மிஸ்டர் ஈடன் இங்கிலாந்திற்குத் திரும்பினர்.

நவம்பர் 11.—பிரிட்டிஷ் மந்திரி சபையில் மாற்றங்கள் நிகழ்ந்தன.

ஹிட்லரின் தலைமை காரியாலயத்திற்கு வரும்படி மார்ஷல் ஆன்டனெஸ்கு அழைக்கப்பட்டிருக்கிருர்.

நவம்பர் 13.—ஜெர்மன் போர் விமானங்கள் இரண்டு பங்கு அதிகப்பட்டிருக்கின்றன வென்று பிரிட்டிஷ் விமானப் படை விமர்சகர் ஒருவர் குறிப்பிடுகிருர்.

நவம்பர் 14.—பி.பி.சி. வானெலி நிலையத்தின் 21-வது ஆண்டு விழாவை முன்னிட்டு மன்னர்பிரான் அதற்கொரு வாழ்த்துச் செய்தி அனுப்பி யிருக்கிருர்.

நவம்பர் 15.—துருக்கியிலுள்ள ஜெர்மன் தூதர் பிரான்ஸ் வான் பேபன் பேர்லினுக்குப் புறப்பட்டு விட்டார்.

நவம்பர் 16.—கப்பல்களைக் காப்பாற்றக் கூடிய வசதி யொன்று புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, பரீட்சித்த பிறகு, பிரிட்டிஷ் டாங்கிகளுக்கு இணைக்கப்பட்டிருப்பதாக, பிரிட்டிஷ் யுத்தப் போக்கு வரவு மந்திரி அறிவிக்கிருர்.

ஹிட்லரைக் காணும் பொருட்டு ஜெர்மனிக்கு முசோலினி போயிருக்கிறதாக, "லா சூசி" என்னும் சுவித்சர்லாந்து பத்திரிகை கூறுகிறது.

மனத் தளர்வடைய வேண்டாமென்று ஜெர்மன் மக்களுக்கு கொப்பல்ஸ் 2 மணி நேரம் பேர்லினி லிருந்து உபதேசம் செய்தார்.

அமெரிக்காவும் அட்லாண்டிக்கும்.

நவம்பர் 10.—எதிரி கைப் பற்றிய நாடுகளை மீட்டு அவற்றின் பழைய நிலைமையில் அவற்றை அமைப்பது பற்றி, நேச நாடுகள் தமக்குள் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டதைக் குறித்து மிஸ்டர் ரூஸ்வெல்ட் ஒரு வானெலிப் பிரசங்கம் செய்தார்.

நவம்பர் 11.—மிஸ்டர் ரூஸ்வெல்டும், மிஸ்டர் சர்ச்சிலும், மார்ஷல் ஸ்டாலினும் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகத் தெரிகிறது.

நவம்பர் 16.—யுத்தத்திற்குப் பிறகு எல்லா நாடுகளும் ஒத்துழைப்பதற்கான அஸ்திவாரத்தைத் தாம் மாஸ்கோவில் போட்டிருப்பதாக மிஸ்டர் கார்டல் ஹல் குறிப்பிட்டார்.

யுத்தத்திற்குப் பிறகு நடைபெற வேண்டிய நாணயச் செலாவணி பற்றியும் வியாபாரப் பிரச்சினைகளைப் பற்றியும் விவாதிக்கும் பொருட்டு, ஒரு சோவியத் நிதிக் கமிஷன் விரைவில் வாஷிங்டனுக்கு வருமென்று மிஸ்டர் கார்டல் ஹல் குறிப்பிட்டார்.

இந்தியா, பர்மா, இலங்கை.

நவம்பர் 10.—இம்பால் பகுதியில் முன்புரமுள்ள விமான தளங்களை ஜப்பானிய வெடிகுண்டு விமானங்கள் நேற்று தாக்கின.

நவம்பர் 11.—இரவில் அபாய அறிவிப்புச் சங்கு சென்னையில் ஊதியது. குண்டுகள் எதுவும் விழவில்லை.

நவம்பர் 12.—உணவுப் பஞ்சத்தைக் குறித்து இந்தியா சட்டசபையில் விவாதம் ஆரம்பமானது.

அதிகாலையில் இலங்கையில் எதிரி விமானங்கள் அணுகின. ஒரு விமானம் நாசமானது. குண்டுகள் எதுவும் எறியப்படவில்லை.

மாயு, கலிமியோ, மாண்டலே, இன்சீன், ப்ரோம் முதலிய இடங்களிலுள்ள எதிரி ஸ்தாபனங்களை பிரிட்டிஷ் வெடி குண்டு விமானங்கள் தாக்கின.

நவம்பர் 13.—இந்தியாவில் ஒரு ஹை கமிஷனரை நியமிப்பதென்று கனடா அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

நவம்பர் 15.—இந்திய அரசாங்க சபையில் இந்திய பிரதம படைத் தலைவர் யுத்த நிலைமையைக் குறித்துப் பேசினர்.

இந்தியாவுக்கும் பயன்படத்தக்க தோர் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை சர் வில்லியம் பிவிரிட்ஜ் தயார் செய்தார்.

நவம்பர் 16.—வங்காளம், வடமேற்கு மாகாணம், பஞ்சாப், சிந்து, ஆகிய மாகாணங்களின் பிரதம மந்திரிகளை மேன்மை தங்கிய வைசிராய்ப் பிரபு கண்டார்.

ரஷ்யாவும் பின்லாந்தும்.

நவம்பர் 9.—கியெவைக் கடந்து 55 மைல் தூரம் ரஷ்யப் படைகள் போய் விட்டன. இன்று காலையில் கொர்ச நகரத்தைக் கைப்பற்றி விட்டதாகத் தெரிகிறது.

நவம்பர் 10.—முதலாவது உக்ரேனிய போர்முனையிலுள்ள இவான் கோவா, க்ரிபெங்கி முதலிய இடங்களோடு மற்றும் 60 இடங்களையும் ரஷ்யப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

நவம்பர் 11.—கியெவ் மாகாணத்தில் பாதி ரஷ்யர் வசமாகி விட்டது. ஷிடோமிர் மாகாணத்திலும் ரஷ்யப் படைகள் புகுந்து ஷிடோமிர் நகரத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றன.

நவம்பர் 12.—கொரோஷ்டிஷேப்பையும் மற்றும் நூறு இடங்களையும் முதலாவது உக்ரேனியப் படைகள் கைப்பற்றின.

நவம்பர் 13.—ஷிடோமிர் ரயில்வே ஜங்ஷன் எதிரிகளுக்கு பாதுகாப்பு அரணாகவு மிருந்தது. இதை ரஷ்யர்கள் கைப்பற்றி விட்டனர்.

நவம்பர் 14.—சராக்கோப் நகரம் நொறுங்கத் தக்க நிலையிலிருப்பதாகத் தெரிகிறது.

நவம்பர் 15.—கியெவ் பகுதியின் ஜில்லா தலைநகரமான ககனோவிச்சியையும் மற்றும் 40 இடங்களையும் சோவியத் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

நவம்பர் 16.—டெமிகியை சோவியத் படைகள் கைப்பற்றின. கொரஸ்தன் விரைவில் கைப்பற்றப்படு மென்று எதிர் பார்க்கப் படுகிறது.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதிகள்.

நவம்பர் 10.—சமரச ஒப்பந்தத்தை இத்தாலியின் சார்பாக நிறைவேற்றும் பொருட்டு, நேச நாடுகளின் ஆதிக்கத்திற் குட்பட்ட தோர் கமிஷனை ஜெனரல் அய்சினேவர் நியமித்திருக்கிருர்.

நவம்பர் 12.—மான்டிகம்மினேவின் ஒரு பாகத்தை ஜெனரல் மார்க் கிளார்க்கின் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

நவம்பர் 13.—ஜெனரல் படாக்ளியோ இத்தாலியில் ஒரு அரசாங்கத்தை அமைத்திருக்கிருர். அதில், அவர் பிரதம மந்திரியாகவும், அந்தந்த இலாக்கா விலுள்ள நிபுணர்களை மந்திரிகளாகவும் நியமித்திருக்கிருர்.

நவம்பர் 14.—அடுத்த ஜனவரி வரை இத்தாலியக் குறுக்குப் போர் முனையைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும்படித் தம் தலைவர் ஹிட்லர் இட்ட கட்டளையை நிறைவேற்ற வேண்டி, ரோமாபுரியைக் காக்கும் 83 மைல்கள் நீளமுள்ள மலைக்கோட்டைகளில் ஜெர்மன் படைகள் காவலிருக்கின்றன. எட்டாம் படையும் ஐந்தாம் படையும் மகா கடுமையாக இங்கே போராடிக் கொண்டிருக்கின்றன.

ரோமாபுரி கைப்பற்றப்பட்ட வுடனே, தானே தன் பதவியை ராஜிநாமா செய்து விடுவதாக ஜெனரல் படாக்ளியோ அறிவித்தார்.

நவம்பர் 15.—மிலான் நிலைமை நெருக்கடியா யிருக்கிறது. எதிரிகளில் சுமார் 1,000 பேர்கள் கைதியாயினர்.

நவம்பர் 16.—சாங்கோ ஆற்றுப் பள்ளத் தாக்கு நெடுக எட்டாம் படைகள் நின்று, மாண்டசோலி என்னுமிடத்தில் ஜெர்மன் படைகளோடு போராடி, அலெசாவிற்கு வடக்கேயுள்ள ஒரு மலைப் பகுதியைக் கைப்பற்றியது.

விஷி, சுயேச்சை நாடுகள், எதிரி கைப்பற்றிய நாடுகள்.

நவம்பர் 9.—பிரஞ்சு தேசிய மீட்சிக் கமிட்டியின் தலைவர் பதவியை ஜெனரல் ஜிராட் ராஜிநாமாச் செய்து விட்டார்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை கிரேக்க மன்னரையும் பிரதம மந்திரியையும் மிஸ்டர் ஈடன் சந்தித்தார்.

கிரேக்க மன்னர் ஜார்ஜின் எதிர்கால நிலைமைபற்றி தான் எந்த விதத்திலும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள வில்லை யென்று பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சில் 9-ம் தேதி கூறினர்.

நவம்பர் 11.—இராணுவச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டிருக்கும் லெபனுனில் பிரான்சுக்கு விரோதமாக ஒரு பெரும் சூழ்ச்சி நடைபெறுவதாக பெய்ரூட்டிலிருக்கும் பிரெஞ்சு கமிஷனர் அறிவிக்கிருர். பொது ஜனப் பிரதிநிதி சபை கலைக்கப்பட்டு விட்டது. லெபனுன் அரசாங்கத்தின் தலைவரும் முதன் மந்திரி முதலிய எல்லா மந்திரிகளும் பிரஞ்சு போலீசாரால் கைது செய்யப்பட்டனர். பல இடங்களிலும் கலகங்களும் கலவரங்களும் நடை பெறுவதாகத் தெரிகிறது.

எகிப்திய மன்னரும் முதல் மந்திரியும் சுயேச்சை பிரஞ்சு அரசாங்கத்தின் செயலை ஆட்சேபித்திருக்கின்றனர்.

நவம்பர் 12.—ஜெனரல் டிகால் அரசாங்கத்தின் போக்கை ஆட்சேபித்து ஒரு கடிதத்தை, பிரிட்டிஷ் அரசாங்கம் அனுப்பி யிருக்கிறது.

நவம்பர் 13.—வாக்குறுதி கொடுத்தபடி லெபனுன் மக்களுக்கு சுயாட்சி வழங்குவதற்கான முறைகளைத் தான் மேற்கொண்டிருப்பதாக, சிரியாவிலுள்ள பிரெஞ்சு டெலிகேட் ஜெனரல் ஒரு பிரகடனம் செய்திருக்கிருர்.

நவம்பர் 14.—லெபனுனில் ஒரு போலி அரசாங்கம் அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

நவம்பர் 15.—மார்ஷல் பெட்டெய்ன் மிகவும் நோயாயிருப்பதாக 'லா சூசா' என்னும் பத்திரிகையின் விஷி நிருபர் அறிவிக்கிருர்.

நவம்பர் 16.—லெபனுன் நெருக்கடி பற்றி, டி கால் ஒரு அறிக்கை விடுத்தார்.

பெய்ரூட்டிலுள்ள பிரிட்டிஷ், பிரெஞ்சு அதிகாரிகளை ஜெனரல் செட்ராஸ் கலந்து பேசினர்.

பிரஞ்சு மீட்சிக் கமிட்டியில் பொதுவுடமைக்காரர்கள் பதவிகளேற்றுக் கொண்டிருக்கின்றனர்.

நடு நிலைமை நாடுகள்.

நவம்பர் 11.—மூன்று மணி நேரத்திற்குமேல் நடைபெற்ற துருக்கி மந்திரி சபைக் கூட்டத்தில், வெளிநாட்டு மந்திரியான மூமான் மெனிமான்ஸிஜோக்லு, தான் பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரியா யிருக்கும் மிஸ்டர் ஈடனை, கெய்ரோவில் சந்தித்துப் பேசியதைக் குறித்து அறிவித்தார்.

தூரக் கிழக்கு நாடுகள்.

நவம்பர் 9.—தென் மேற்குப் பசிபிக் மகா சமுத்திரத்தில் நேச நாட்டு விமானங்கள், 6 ஜப்பானிய யுத்தக் கப்பல்களை மூழ்கடித்து, 63 விமானங்களை நாசப்படுத்தின.

நவம்பர் 11.—கவியெங்குக்கு அப்பால் 10,000 டன் ஜப்பான் விமானக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. 67 எதிரி விமானங்கள் நாசமாயின.

நவம்பர் 12.—பசிபிக் யுத்த நிலைமை பற்றி அமெரிக்க பிரதம பசிபிக் கப்பற் படைத் தலைவர் அட்மிரல் செஸ்டர் நிமிட்ஸ் ஒரு அறிக்கை விடுத்தார்.

நவம்பர் 13.—யாங்ட்சி, சால்வீன் ஆறுகளை யடுத்த போர் முனைகளில், சீனப் படைகள் எதிரிகளைத் திருப்பி யடித்து, பல பட்டணங்களைக் கைப்பற்றிக் கொண்டன.

நவம்பர் 16.—ஆஸ்திரேலிய கவர்னர் ஜெனரலாக எச். ஆர். எச். க்ளூஸ்டர் பிரபு நியமிக்கப்பட்டிருக்கிருர்.

ரூ. 5,000 ரூ. 1,000

பரிசுகள்

எதிரி உளவாளிகள் யார்?

எதிரிக்கு உதவி செய்கிறவர்கள் யார்?

பிடித்துக் கொடுத்தால் ரூ. 5,000 வரை பரிசு

அவர்களைக் கைது செய்யத் தக்க தகவல் கொடுப்பவர்களுக்கு

ரூ. 1,000 வரை பரிசளிக்கப்படும்

- 1. சந்தேகத்திற் கிடமான கப்பல் நடமாட்டங்கள்; குறிப்பாக, கடலோரங்களில் நடமாட்டங்கள்,
- 2. அந்நியர்கள் இராணுவ உடுப்புக்களுடனும் ஆயுதங்களுடனும், அல்லது அவையின்றியும், கூட்டமாகவோ, தனித் தனியாகவோ காணப்பட்டால்,
- 3. நேச நாட்டு விமானங்கள் அல்லாதவை தரையிலோ ஆகாயத்திலோ காணப்பட்டால்,
- 4. அவற்றிலிருந்து விமானக் குடைகளின் உதவியால் யாராவது இறங்கினாலும், எதையாவது இறக்கினாலும்,
- 5. தரையிலோ, கடலிலோ, ஆகாயத்திலோ எதிரி நடமாட்டம் பற்றிய குறிப்புக்கள் ஆகிய தகவல்களைக் கொண்டு எதிரிகளின் உளவாளிகள் கைது செய்யப்பட்டால்,

இந்தப் பரிசுகள் கொடுக்கப்படும்

உளவாளிகள் கிடைத்தாலும் அல்லது தகவல் கிடைத்தாலும் கிராமப் பெரியதனக்காரருக்காவது, போலீசாருக்காவது கூடிய சீக்கிரம் தெரிவிக்க வேண்டும்; அல்லது கைது செய்யப்பட்டால், அவர்களிடம் ஒப்புவிக்க வேண்டும்.

பரிசுத் தொகை பெற விரும்புவோர் அது சம்பந்தமான முழு விவரங்களும், சாட்சிகளின் பெயர்கள், விலாசங்கள், வாக்கு மூலங்கள் ஆகியவற்றுடன் ஜில்லா கலெக்டருக்காவது ஜில்லா மாஜிஸ்திரேட்டுக்காவது அனுப்ப வேண்டும்.

இந்தப் பரிசுகள் சாதாரணமாக படை உத்தியோகஸ்தர்களுக்கும், சிவில் இலாக்காக்களிலுள்ள கெஜடெட் உத்தியோகஸ்தர்களுக்கும் கொடுக்கப்பட மாட்டா. ஆனால், சில விசேஷ சந்தர்ப்பங்களில் இந்தியா அரசாங்கத்தின் அனுமதி பெற்று அவர்களுக்கும் வழங்கப்படும்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.